குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24] குரோதிஆண்டு பங்குனித்திங்கள் 10—4—65 [இதழ்





ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

செங்கமலப் பொற்பாதன்
சீர்பாத வல்லவங்கள்
நங்கமலே வாழ்கிளியே !
நாடிக்கேள் - சங்கையிலாத்
தத்துவத்தைக் காட்டியதன்
தத்துவத்தைக் காட்டி அருள்
தத்துவத்தைக் காட்டியது
தான். (28)

ஆசிரியர்,-

வித்துவான்.

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்,

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 | 10-4-65 | இதழ் 5

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | புத்தாண்டு ஆசிச்செய்தி | 257 |
| 2 | சித்திரைச் சிறப்பு ... | 259 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... | 264 |
| 4 | சித்தாந்த வினவிடை ... | 271 |
| 5 | சிவாகமத் தெளிவு ... | 277 |
| 6 | "அன்னையும் ஐயனும்"... | 286 |
| 7 | புகழுக்கும் இறுதி உண்டோ ! ... | 293 |
| 8 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்குப் பாராட்டு வாழ்த்துரை ... | 298 |
| 9 | மண்ணுங்கட்டிநெஞ்சே! | 300 |
| 10 | வேலூர் இலவச சித்த வைத்தியசாலை ஆண்டறிக்கை ... | 304 |
| 11 | சஹஸ்ராகமம் ... | 310 |
| 12 | செய்திகள் ... | 314 |
| 13 | எதிர்காலம் ... | 318 |

அட்டைப் பட விளக்கம்

சீகாழியில்

ஸ்ரீ திருஞானசம்பந்தர்

குருபாதம்

திருத்தருமை யாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# புத்தாண்டு ஆசிச் செய்தி

பாரவன்காண் ; பாரதனிற் பயிரா னான்காண் ;
பயிர்வளர்க்கும் துளியவன்காண் ; துளியில்நின்ற
நீரவன்காண் ; நீர்சடைமேல் நிகழ்வித் தான்காண் ;
நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் ; பிறையெயிற்று வெள்ளைப் பன்றிப்
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன்காண் ; சீருடைய தேவர்க் கெல்லாம்
சிவனவன்காண் ; சிவபுரத்தெம் செல்வன் தானே.

உலகம் நடைபெறுவதற்கு, 'காலம், இடம்' என்னும் இவை இரண்டும்இன்றியமையாதன. இடமும் காலத்திற்குஉட்பட்டதே யாம். ஆகவே, எல்லாப் பொருள்களும் காலத்திற்கு உட்பட்டு அதன்வழி நடப்பனவாகும். ஆயினும், அத்தகைய காலமும் இறைவன் திருவருள் வழியே நடப்பது.

" அருநிலைய திங்களாய் ஞாயி றாகி "

" நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே "

என்பனபோன்ற அருள்திருமொழிகள், இதனை நன்கு உணர்த்து கின்றன.

நாள், கிழமை, திங்கள், ஆண்டு முதலாகக் காலம் பலவகையாக நிகழ்கின்றது. அவைகளில், 'ஆண்டு' என்பது முதன்மையான ஒன்று. தமிழ் மக்கட்குப் புத்தாண்டு பிறக்கின்றது, இவ்வாண்டு முழுதும் இனிது நிகழ்ந்து, பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளமும் சுரக்கவும், அச்சமும் பகையும் அகன்று, அமைதியும் அன்பும் தழைக்கவும் அவர்கள் ஆண்டவனை வேண்டி வழிபடுதல் வேண்டும்.

நிலமும் அவனே; நிலத்தில் வளர்ந்து பயன் தரும் பயிரும் அவனே; பயிருக்கு இன்றியமையாத மழையும் அவனே; எல்லாம் அவனே. அவன் அருளைப் பெற்றவர்க்கு நாளும், கோளும் நன்மையே செய்யும்.

" ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறும் நல்ல; நல்ல; அவைநல்ல; நல்ல
அடியா ரவர்க்கு மிகவே "

" ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல; நல்ல; அவைநல்ல; நல்ல
அடியா ரவர்க்கு மிகவே "

என்ற திருஞானசம்பந்தர் திருவாக்கு, ஒவ்வொரு தமிழரது உள்ளத்திலும் உறுதியாக நிலைபெறல் வேண்டும், அத் திருப் பதிகத்தை இச்சிறப்பு நாளில் ஓதுதல் இன்றியமையாதது. அங்ஙனம் ஓதுபவரை, நாளும் கோளும் நலியாமையேயன்றி, எவ்வகையான இடர்களும் நீங்கி, இன்பம் பெருகும் என்பதை விரித்துரைக்கத் தேவை இல்லை.

தமிழ்மக்கள் அனைவரும் இத்தகைய அருட்டிருப்பாடல்களால் இறைவனை ஏத்தி வழிபட்டு, இன்னல் பலவும் நீங்கி, இன்பம் பலவும் எய்தி இனிது வாழ, எங்கள் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முன்னிற்பதாக.

வாழ்க உலகெலாம்!

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] குரோதி - பங்குனி - 10—4—65 [ இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## சித்திரைச் சிறப்பு

சித்திரைத் திங்கள் தமிழர்களது ஆண்டுத் தோடக்கம் என்பது அனைவரும் அறிந்தது. அத் தோடக்க நாள் அண்மையில் பிறக்க இருக்கின்றது. அதனை நினைக்குந்தோறும் தமிழ் மக்கட்குத் தனித்ததோரு மகிழ்ச்சியும், ஊக்கமும் உண்டாதல் இயற்கை.

தமிழ் மக்கள் தங்களது புத்தாண்டு நாள் பிறக்கும் வேளையைக் கோண்டே அந்த ஆண்டு முழுதும் தங்கட்கும்,

தங்கள் நாட்டிற்கும் நிகழ இருக்கும் எதிர்கால நிகழ்ச்சிகளை அறிகின்றனர். அதனால், அந்த நாள் அவர்களது வாழ்க்கையோடு ஒட்டிய நாளாக அமைகின்றது.

நாடு முழுவதற்கும் பொதுவாக வேண்டிய பருவமழை, விளைபொருள்களின் விளைவு, அரசியல் நடைமுறைகள் முதலியவையும், தனிப்பட்டவர்களது வாழ்க்கை நிலை, வரவு செலவு முதலியவைகளும் போன்ற அனைத்தும் ஆண்டுப் பிறப்பின் அமைப்புக்கு ஏற்றவாறே அமையும் என்பது அவர்களது உறுதியான எண்ணம். அதனால், பொதுநலம் பற்றியும், தம் நலம் பற்றியும் ஆண்டவனை அகங்கனிந்து வேண்டும் ஓர் உயர்ந்த நோன்பு நாளாகத் தமிழ் ஆண்டுப் பிறப்புநாள் போற்றப்பெறுகின்றது.

சைவப் பெருமக்கட்கு இச் சித்திரைத் திங்கள் மற்றும் பல வகைகளில் தனிச் சிறப்புடையதாய்த் திகழ்கின்றது. சைவசமயாசாரியர் நால்வருள் முதல்வராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார், தாவில் சராசரங்களெலாம் சிவம் பெருக்க இந் நிலவுலகில் தவம் பெருக்கும் சண்பையிலே திருவவதாரம் செய்தருளியது, சித்திரைத் திங்கள், திருவாதிரை நாளிலேயாம். பின்பு அவர் மூவாண்டில் உலகுய்ய ஞானப்பாலை உண்டு, அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும். தாவில் தனிச் சிவஞான சம்பந்தராய், "தோடுடைய செவியன்" என்பது முதலாகத் திருநெறிய தமிழை அருளிச் செய்து, பதிகப் பெருவழி காட்டத் தொடங்கியதும் சித்திரைத் திருவாதிரையே; அஃதாவது அவரது நான்காவது பிறந்தநாளிலேயாம். இவற்றைக் கருதியே சேக்கிழாரும் தமது திருத்தொண்டர் புராண அரங்கேற்றத்தைத் தில்லையில் சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடித்தருளினார். இதனை,

*"தாளுடைய திருச்சிலம்பு புலம்பகடம் புரியுந்*
*தன்மைஅர னுக்கிசைந்த பேர்வழியில் நாளும்*
*ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும்*
*அவர்அமுது திருஞானம் அமுதுசெய்த நாளும்*

ஆளுடைஆ திரைநாளாம் சித்திரைஆ திரைநாள்
தொடங்கிஎதி ராம்ஆண்டு சித்திரைஆ திரையில்
நாளுடைய கதைமுடிப்பம் எனக்குன்றை வேந்தர்
நடத்தஅனை வரும்இருந்து கேட்டனர்நாள் தோறும்"

என்று அருளிச்செய்கின்றார், உமாபதி சிவாசாரியார்.

ஆளுடைய பிள்ளையார் அம்பிகைதன் திருமுலைப்பால் உண்டருளிய இவ்வருட்டிருவிழாக்காட்சி சித்திரைத் திங்களின் சீகாழியில் சிறப்புற நடைபெறுவதாகும். 'திருமுலைப் பால் சேவித்தவர்க்கு, மறுமுலைப்பால் இல்லை' என்புது பழமொழி. 'சித்திரைத் திங்கள்' என்றவுடன், திருமுலைப் பால் உற்சவமே, முதற்கண் தென்னாட்டு மக்கள் உள்ளத்தில் தோன்றுவதாகும். தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழித் திருக்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் உடன் இருந்து நடத்துவிக்கும் இத்திருமுலைப்பால் உற்சவக் காட்சி சிந்தையை அள்ளும் திருக்காட்சியாய்த் திகழும். இப்பொழுது 25-வது மகாசந்நிதானமாக எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இவ்விழாவை உடனிருந்து செய்வித்தருளும் தனிப்பெருஞ் சிறப்பைக் கண்டு களிக்கும் பேறு நமக்கெல்லாம் வாய்த்துள்ளது.

எவ்விடத்திலிருந்தும் வந்து, என்னிட இடமின்றி நெருங்கி நிற்கும் அன்பர்கள் பலரும் சிறியவும் பெரியவுமான பாற்செம்புகளைக் கொணர்ந்து நிவேதிக்கக் கொடுத்துத் திரும்பப் பெற்றுச்செல்லும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகும். இன்னும் திருவையாறு முதலியசிவதலங்கள் பலவற்றில் சித்திரைத் திங்களில் சித்திரை நட்சத்திரத்தை முன்னிட்டுச் சைத்ரோற்சம் நடைபெறுதல் அறியத்தக்கது.

அலகில் கலைத்துறை தழைப்ப, அருந்தவத்தோர் நெறி வாழ அவதாரம் செய்து, ஆளுடைய பிள்ளையாரால், 'அப்பர்' எனப் போற்றப்பெற்று அவரோடு ஒருகாலத்தே வாழ்ந்து,

திருத்தொண்டின் நெறியைத் திகழச் செய்த திருநாவுக்கரசு நாயனார் இறைவன் திருவடி கூடிய நன்னாளும், சித்திரைச் சதயமேயாகும்.

"......................................வீரிஞ்சன்முதல்
யோனிகளா யினவெல்லாம் உள்நிறைந்த பெருமகிழ்ச்சி
தான்நிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில்"

எனச் சேக்கிழார் எடுத்துக் கூறியது, திருநாவுக்கரசர் திருநாளினையேயாம். தமிழ் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து, தொடர்பாக நான்கு திங்களும், சைவ சமயாசாரியர் நால்வரது திருநாட்களைக் கொண்டு விளங்குதல், உணர்ந்து இன்புறுதற்கு உரியது.

"சித்திரை அத்தம் உமாபதி" என்றபடி, சைவ சந்தானாசாரியர் நால்வருள் நான்காமவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரது திருநாள் சித்திரைத் திங்களிலே அமைந்தது. ஏனைய மூவரது திருநாட்கள், சமயாசாரியரது திருநாட்கள் முடிந்த அடுத்த திங்களிலிருந்து மூன்று திங்களில் தொடர்ந்து வருவனவாகும். இவ்வாறு தமிழ் ஆண்டுத் தொடக்கமும், அதன் முதல் திங்களாகிய சித்திரையும் சைவப் பெருமக்கட்குத் தனித்ததொரு மகிழ்ச்சியூட்டுவனவாய் இருத்தலை அறியலாம்.

தமிழ் மக்கள் தம் நலத்தின் பொருட்டும், உலக நலத்தின் பொருட்டும் தம் தம் வழிபடு கடவுளைப் பல்லாற்றானும் பணிந்து வேண்டும் நன்னாளாகிய தமிழ் ஆண்டுத் தொடக்க நாளில், சிறப்பாக நாள் கோள்களால் நலிவு வாராதிருக்க வேண்டுதல் மரபு. இத்தகைய வேண்டுதல் செய்யத் தமிழ் மக்கட்கு அவர்தம் தாய் மொழியில் எத்துணையோ அரிய அழகிய திருப்பாடல்கள் உள்ளன.

பதினொன்றாந் திருமுறையில் உள்ள கபிலதேவநாயனார் அருளிச்செய்த மூத்தநாயனார் (விநாயகர்) திருஇரட்டைமணிமாலையில்,

"வருகோள் தருபெருந் தீமையும் காலன் தமரவர்கள்
அருகோட் டரும்அவர் ஆண்மையும் காய்பவன்"

என்று, பிள்ளையார் சிறப்பிக்கப்பெறுகிறார். அருணகிரிநாதர் அருளிய கந்தர் அலங்காரம், முருகப் பெருமான் முன் நின்றால்,

"நாள்என் செயும்! வினை தான்என் செயும்! எனை நாடிவந்த
கோள்என் செயும்! கொடுங் கூற்றென் செயும்!"

என்று தேற்றுகின்றது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முன்னிலையில், 'பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால், பழுது அணையாது' எனப் பகர்ந்து, கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் அருளிச் செய்த! "வேயுறு தோளி பங்கன்" திருப்பதிகத்தை அறியாதார் யார்,

தமிழ் ஆண்டுத் தோடக்கத்தில் தமிழ் மக்கள், இத் தகைய திருப்பாடல்களால் இறைவனைப் போற்றி இடர் நீங்கப் பெற்று இனிது வாழ்வதோடு, எண்ணற்ற இறையருட் பாடல்களுடன் விளங்கும் திருவருட் கருவூலமாகிய திரு நேறித் தமிழை, உலகம் வாழ, ஒவ்வோருவரும் வாழப் போற்றுதற்கு உள்ளத்து உறுதி பூண்பார்களாக.

எல்லாம் அரன் நாமமே சூழ்க!

வையகமும் துயர்தீர்கவே!

---


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தேளியச்சேய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வேளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A.. B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

குருபாதம்

## திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

---

## குருவருள் அநுபவம்

தேசு செறிமலைச் செங்கமலப் பொற்பாதன்
பேசுதமிழ் ஞானப் பிரகாசன் - பாசவினை
வாட்டினுன் மீட்டுநான் வாரா வகைஅருளைக்
காட்டினுன் கூட்டினுன் காண்.

—குருஞானசம்பந்தர்.

உலகில் அனைவரும் அநுபவிக்கும் அநுபவம் இரண்டு ஒன்று, இன்ப அநுபவம்; மற்ருென்று, துன்ப அநுபவம். 'மயக்க அநுவம்' என்று, மூன்ருவதும் ஒன்று உண்டு. இவை அனைத்தும் கிடைத்தற்குக் காரணம், வினை - அல்லது கன்மம்.

'நல்வினை, தீவினை' என, வினை இருவகைகளை உடையது. ஒவ்வொரு வகையிலும் செயல்கள் பலவாய் வருவதால், வினைகளும் அளவில்லாதனவாகும். நல்வினையே, 'புண்ணியம்' என்றும், தீவினையே, 'பாவம்' என்றும் சொல்லப்படும். நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் கொணர்ந்து ஊட்டுவிக்கும். வினையைச் செய்தால், அதன் பயனை அநுபவிக்கவே வேண்டும். அதினின்றும் தப்புதல் இயலாது; ஆகவே, தீவினையின் பயனுகிய துன்பத்தை நாம் விரும்பாதபொழுதும், அது வந்தே சேர்வதுபோல, நல்வினையின் பயனுகிய இன்பமும் நாம் விரும்பாதிருப்பினும் வந்தே சேரும். ஆயினும், நாம் இன்பத்தின் வருகையை விரும்பி அதனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ருேம்; வந்தபின்பும், நீங்காதவாறு பாதுகாக்க

முயல்கின்றோம். ஆனால், துன்பத்தின் வருகையை நினைந்து அஞ்சுகின்றோம்; வாராதவாறு தடுக்கவும், வந்தபின்பும் அதனை வெறுத்து ஒழிக்கவும் முயல்கின்றோம். நம் நிலை எதுவாயினும், வினை தன் பயனைத் தாராமல் நீங்குவது இல்லை.

" ஊட்டும் வினையிருந்தால் உன்ஆணை உன்பதத்தைப்
பூட்டிப் பிடித்துப் புசிப்பிக்கும் "

என்பது, எங்கள் ஆதி பரமாசாரியர் அருள்வாக்கு.

" பரியினும் ஆகாவாம் பாலல்ல ; உய்த்துச்
சொரியினும் போகா தம "

" ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் "

என்று திருவள்ளுவரும்,

" வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா-இருந்தேங்கி,
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில் "

என்று ஒளவையாரும் அருளிச்செய்த அருள்மொழிகள் நன்கு அறியற்பாலன.

உயிர், இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்கு உடம்பு வேண்டும். 'இன்ப துன்பங்கள்' என்று ஒரு வார்த்தையால் நாம் சொல்லியபோதிலும், அவைகளில் எத்தனையோ வகைகள் உள்ளன. அத்தனை வகைகளையும் அநுபவிப்பதற்கு ஒருவகையான உடம்பு அமையாது; அளவற்ற வகையில் உடம்புகள் வேண்டும். ஆகவே, எந்த எந்த வகையான இன்ப துன்பங்களை அநுபவிக்க வேண்டுமோ, அந்த அந்த வகைக்கு ஏற்ற உடம்புகளை வினைகள் உயிர்க்குச் சேர்ப்பிக்கும். அதனால், வினைகள் உள்ள அளவும், பிறப்புக்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். எந்தப் பிறப்பிலும் துன்பம் இல்லாமல் இல்லை. எனவே, பிறப்பு உள்ள அளவும் துன்பத்தினின்றும் நீங்குமாறு இல்லை. 'நல்வினை இன்பம் தரும்' என்பது, பெருந்துன்பமாகிய பிறப்பின் இடையிலே தரும் சிறிய இன்பத்தையேயாம். அத

னால், 'பிறப்பு' என்னும் பெருந்துன்பக் கடலில் தள்ளுவதில், நல்வினையும், தீவினையோடு ஒத்ததேயன்றி வேறில்லை. தீவினையை 'இருப்பு விலங்கு' என்றும், நல்வினையை, 'பொன் விலங்கு' என்றும் கூறுவர். கையிலும், காலிலும் பூட்டப்பட்ட விலங்கு' இரும்பாய் இருந்தால் என்ன? பொன்னாய் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றே. 'விலங்கு' என்பதே சாத்திரத்தில், 'பாசம்' எனப்படுகின்றது. இவ்வினையாகிய பாசம் - விலங்கினின்றும் விடுபடுவது எவ்வாறு?

இருவினைகளாகிய விலங்கினை முரித்து, உயிரை அவற்றினின்றும் விடுவிப்பவர், ஞான குருவே. பக்குவம் வாய்ந்த உயிர்களுக்கு இறைவன், 'ஞானாசிரியர் வழியாகவே வினைகளை நீக்கி, ஞானத்தை உபதேசித்து, வீடுபெறச் செய்வன். கந்தபுராணத்திலே இவ்வுண்மை அமைந்திருத்தலை உணரலாம்.

தேவர்கள் சூரபதுமனால் தங்கள் கையிலும், காலிலும் பூட்டப்பட்ட விலங்குகளில் அகப்பட்டுச் செய்வதறியாது துயருற்றுப் புலம்பினர். அவர்களது தவம் காரணமாகச் சிவபெருமான், ஞான பண்டிதனாகிய முருகப்பெருமானை அனுப்ப, அவர் ஞான வடிவான வேற்படையை ஏவி, சூரபதுமனை அழித்து, தேவர்களது விலங்கைத் தறித்துச் சிறைமீட்டு, விண்குடி ஏற்றினார். இஃது, உயிர்கள் செய்த தவம் காரணமாக, இறைவன் ஞானகுருவாய் வந்து பாசத்தை அறுத்து, வீட்டைப் பெறுவிக்கும் உண்மையை நன்கு புலப்படுத்துகின்றதன்றோ!

பிறப்பிற்குக் காரணமாகிய வினைகள் மூன்று வகைப்படும். அவை, 'ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம்' என்பன. அவ்வப்பொழுது செய்யப்படும் செயல்களால் தோன்றுவது, ஆகாமியம். இதனை, புதுவினை' எனலாம். 'மேல் வினை' 'எதிர்வினை, எனப்படுவதும் இதுவே. ஆகாமியம், பின்புவந்து பயன் கொடுக்குமளவும் தங்கிக் கிடக்கும்; அந்நிலையில் சொல்லப்படும் பெயரே 'சஞ்சிதம்' என்பது. இது, பல பிறப்புக்களில் செய்யப்பட்டு, மலைபோல் குவிந்து கிடக்கும். 'தொல் வினை' 'பழ வினை', 'முன் வினை' என்றெல்லாம் சொல்லப்படுவது இதுவே. ஒரு பிறப்பு வருங்கால், அதில் பயன் தருதற்குச் சஞ்சிதத்திலிருந்து அப்பிறப்போடு ஒட்டிக்கொண்டு வரும் வினைகள் சிலவே. அவையே பிராரத்தம் எனப்படும். 'ஊழ்வினை, என்றும் 'நுகர்வினை'

என்றும் சொல்லப்படுவது இதுவே. சஞ்சிதம், ஓர் உழவனுக்கு ஓர் ஆண்டில் விளைந்த நெல் போன்றது என்றும், பிராரத்தம், அந்நெல்லிலிருந்து அவன் அந்த ஆண்டில் தனது உணவிற்கு எடுத்துக்கொண்ட நெல்போன்றது என்றும், ஆகாமியம், அடுத்த ஆண்டிற்கு விதையாக வைக்கும் நெல் போன்றது என்றும் கூறலாம்.

சஞ்சிதமாய் உள்ள வினைகளே சிறிது சிறிதாகப் பிராரத்த மாகி வருதலால், சஞ்சிதம் உள்ள வரையிலும் பிறப்பு வந்து கொண்டே இருக்கும். பிறப்பு வந்தபின் பிராரத்தநுகர்ச்சியின் பொழுதெல்லாம், ஆகாமியமும் தோன்றிக்கொண்டே இருக்கும். அந்த ஆகாமியம் பின்பு சஞ்சிதமாய்க் குவிந்துவிடும். இந்த மூன்றும் குருவருளால் எங்ஙனம் நீங்குகின்றன என்று அறிதல் வேண்டும்.

உழவன் ஒருவனுக்கு ஓர் ஆண்டு முழுவதற்கும் வேண்டும் நெல் அவனிடம் இருக்குமாயின், அவன் ஓரளவு களிப்புடைய வனுகவே இருப்பான்; அதற்குமேலும் மிகுதியான நெல்இருப்பின் அளவற்ற களிப்புக்கொண்டு, எந்தச் சிந்தனையும் இல்லாதொழி வான். அதுபோலவே, பிராரத்தத்தால், 'யான் எனது' எனது என்று முனைத்து நிற்கின்ற முனைப்பிற்குச் சஞ்சிதம், மிகவும் உறுதியைக் கொடுத்து நிற்கும். அதனுல், சஞ்சிதம் உள்ள வரையிலும், ஞானம் விளங்காது. அந்தச் சஞ்சித கன்மத்தை யே முதலில் ஞானகுரு பல வகையில் நீக்குகின்ருர், அந்தச் செயல்களே 'தீக்ஷை' என்று சொல்லப்படுகின்றது. 'தீக்ஷா' என்னும் பதத்தில், 'க்ஷா' என்பது, பாசத்தைப் போக்குவதை யும் 'தீ' என்பது, ஞானத்தை உண்டாக்குவதையும் குறிக்கும்.

"பலவிதம் ஆசான் பாச
மோசனந்தான் பண்ணும் படி"

என்ற சிவஞான சித்தியின்படி, தீக்ஷைகள் பல வகைப்படும், அவைகளில், குண்ட மண்டல வேதிகாதிகளுடன் கூடிய ஓமத் தால் செய்யப்படும் ஔத்திரி தீக்ஷை சிறந்தது. இதன் மூலம் நிர்வாண தீக்ஷையில், 'அத்துவ சுத்தி' என்றும், 'கலா சோதனை என்றும் செய்யப்படும் செயல்களெல்லாம், சஞ்சித கன்மத்தை நீக்குவனவேயாகும். ஞானசிரியரது ஞான நோக்கம் பட்ட

மாத்திரத்தில், மாணுக்கனது சஞ்சித கன்மங்களெல்லாம். எரி சேர்ந்த வித்துப்போலக் கெட்டொழியும் என்பர். தேவாரத் திருப்பதிகங்களுள், குருவருளாகிய முதல் திருப்பதிகங்கள் சஞ்சித வினையைப் போக்கும் என்பதற்கே ஞானசம்பந்தர் முதல் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில்,

" திருநெறி யதமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே"

என்று அருளிச்செய்தார். இதில், "தொல்வினை" என்றது சஞ்சிதமே என்பது தெளிவு.

சஞ்சித கன்மம் ஒழிந்த பின்பே உயிருக்கு ஞானுசாரியர் உபதேசிக்கும் உண்மை, உண்மையாய் விளங்கும். இச்சஞ்சித கன்ம நீக்கத்தையே, 'அந்தக் கரணசுத்தி' என்று பிற வைதிக சமயங்கள் கூறுகின்றன. ஆகவே, அத்துவ சோதனை செய்தபின்பே ஞானகுரு ஞானத்தை உபதேசிப்பர். அதனை உணர்ந்தபின், பிராரத்த நுகர்ச்சியும் உயிரைத் தாக்காது. அஃதாவது, நல்வினையின் பயனுகிய இன்பத்தை விரும்புதலும், தீவினையின் பயனுகிய துன்பத்தை வெறுத்தலும் நீங்கி, தாமரை இலையில் தண்ணீர் ஒட்டற்று நிற்பதுபோல நின்று அநுபவிக்கும் நிலை உண்டாகும்.

இன்பத்தை விரும்புதலால், அதனை வருவிப்பதற்கும், வந்த பின் நீங்காது காப்பதற்கும் உரிய முயற்சிகள் மன மொழி மெய் களாற் செய்யப்படுகின்றன. அங்ஙனமே துன்பத்தை வெறுப்ப தால், அதனை வாராமல் தடுப்பதற்கும், வந்தபின் அதனை விரைவில் போக்குதற்கு உரிய முயற்சிகளும் நிகழ்கின்றன. இம் முயற்சிகளே ஆகாமியமாய் விளைகின்றன. ஞானம் இல்லாதபொழுது இவை அனைத்தும், நம்மாலும் பிறராலுமே ஆவனவாகக் கருதுதலால், மேற்சொல்லிய முயற்சிகள் உண்டா கின்றன. அவ்வாறு கருதும் கருத்தே, 'யான், எனது' என்னும் முனைப்பு என்று சொல்லப்படுகிறது.

ஞானம் வந்தபின்பு, இவற்றுள் ஒன்றும், நம்மாலும் ஆவ தில்லை; பிறராலும் ஆவதில்லை; இறைவனுலே ஆகின்றன என்னும் அருளுணர்வு பிறத்தலால், அதன்பின்பு பிராரத்த

நுகர்ச்சியும், அதனுல் வினையும் ஆகாமியமும் இல்லையாய் ஒழியும். சஞ்சிதம் முன்பே ஒழிக்கப்பட்டது. ஆகவே, சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூவகை வினைகளாகிய விலங்கும் குருவருளால் தறிக்கப்பட்டு ஒழிதலின், குருவருள் பெற்றவருக்கு உலக அநுபவம் நீங்கி, இறை அநுபவம் உளதாகும். அப்பொழுது,

" நாம்ஆர்க்குங் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணிஅறியோம்; பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை; "

" என்றும்நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம்;
இருநிலத்தில் எமக்குஎதிரா வாரும்இல்லை;
...... ஒன்றினுற் குறையுடையோ மல்லோம்;

" வானந் துளங்கிலென்! மண்கம்ப மாகிலென்!
மால்வரையும்
தானந்துளங்கித் தலைதடு மாறிலென்!
தண்கடலும்
மீனம்படிலென்! இருசுடர் வீழிலென்! "

" எங்கெழிலென் ஞாயிறு! "

என்று இருக்கும் பெருநிலை அவருக்கு உளதாகும். அதனுல், இவ்வுலகத்தில் ஏற்படும் எந்த வகையான மாறுதல்களும் அவரை வாதிப்பதில்லை. அவர்கள் எப்பொழுதும் இருப்பது ஆண்டவன் அருள்வெளியிலே; அதனுல் அவர்கட்கு விளைவது, மாளா இன்ப மாகடலே. இந்நிலையைப் பெற்றவர்களே, 'சிவஞானிகள்' என்றும், 'சிவாநுபூதிமான்கள்' என்றும் போற்றப் படுவர். இந்நிலை எவ்வாறு கிடைக்கும்? குருவினுல்தான் கிடைக்கும். எங்கள் ஆதிபரமாசாரியருக்குத் தமது குரு இப்பெரும் பேற்றை அளித்த நிலையை அவர் வியந்து அருளிச்செய்த திருவெண்பாவே முதலிற் கொடுக்கப்பட்டது.

'ஞானப்பிரகாசர்' என்னும்திருப்பெயரே, மாணுக்கர்களது உள்ளத்தில் ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்பவர்' என்பதை விளக்கும். அவர் கமலை ஞானப்பிரகாசர். கமலை, தேசு செறி கமலை; தேசு-ஒளி; ஞானம். 'கமலை' எனப்படும் திருவாரூர் ஞானபூமியாதல், தொன்மையாகவே அறியப்பட்டது அதன் கண் வீற்றிருந்து ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்துவந்தவர், ஞானப்பிரகாச தேசிகர், அவரது திருப்பாதங்கள், மாணுக்கர் களது உள்ளமாகிய தடாகங்களில் மலர்வனவும், தலையில் சூடிக்கொள்ளப் படுவனவும் ஆகிய செந்தாமரை மலர்கள். அவர் பேசுவது தமிழ். 'தமிழ்' என்பதற்கே, 'இனிமை' என்பது பொருள் என்பதை அனைவரும் அறிவர். இவ்வாறெல் லாம் கூறுகின்ருர் தமது ஞானுசாரியரை, குருஞானசம்பந்தர்.

ஞானபூமியாகிய திருவாரூரில் வீற்றிருந்து, செங்கமல மலர்போன்ற தமது திருப்பாதங்களைத் தமது மாணுக்கர்களது சிந்தையினுள்ளும் சிரத்தினிலும் சேர வைத்து, இனிய தமிழால் திருவாய் மலர்ந்தருளும் ஞானப்பிரகாசர் தமக்குச் செய்த அருளுபகாரமாக எங்கள் ஆதிபரமாசாரியர் எவற்றைக் குறிப்பிடுகின்ருர்? நாம் முன்னே சொன்ன சஞ்சிதம், பிராரத்தம் ஆகாமியம் என்னும் வினைப்பாசங்களாகிய தளைகளை அறுத்தார்: திருவருளாகிய பெருவெளியைக் காணச்செய்தார்; அதினின்றும் மீண்டும் பாச உலகில் திரும்பிவாராதபடி, அத்திருவருள் வெளி யிலேயே சேர்த்துவிட்டார் என்கின்ருர். மாணிக்கவாசகரும், தமக்குக் குருவாகி வந்து அருள்செய்த இறைவனை, "பாசத் தளையறுத் தாண்டுகொண்டோன்" என்று குறிப்பிடுதல், இங்குக் கருதத் தக்கது. அருள்வெளியில் அகலாதிருப்பவருக்கு, ஆனந்த அநுபவம் தவிர, வேறு அநுபவம் இல்லையன்ருே! இதுவே, குருவருளால் பெறும் அநுபவம். இந்த அநுபவ நிலையைப்பெற வேண்டுவோர் அனைவரும், குருவருளைப்பெற முயல்வார்களாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 24, இதழ் 4, பக்கம் 228 இன் தொடர்ச்சி )

## சத்தி உண்மை

மாணாக்கன்: 'உலகிற்கு முதல்வனாய் இறைவன் ஒருவன் உளன்' என்பது, மேல் பல வகை ஏதுக்களைக் கொண்ட கருதலளவையால் (அனுமானப்பிரமாணத்தால்) பெறப்பட்டது; ஆயினும், அவ்விறைவன், இவ்வாறு, 'தானும், தன் சத்தியும்' என இருகூற்றான் இயைந்து நிற்கின்றான்' என்பது, எவ்வாறு பெறப்படுகின்றது?

ஆசிரியர்: 'உலகிற்கு முதல்வனாகிய இறைவன் ஒருவனேயன்றிப் பலர் இல்லை' என்பதும். 'அவ்விறைவன் பொன்னும் மணியும் போல உலகமும் தானும் ஒருபொருளேயாகாமலும், இருளும் ஒளியும் போல, உலகமும் தானும் சிறிதும் இயைபில்லாத இருபொருள்களாகாமலும், உடலுயிர்போலக் கலப்பினால் ஒன்றாயும், கண்ணொளியும் கதிரவன் ஒளியும் போலத் தன்மையால் வேறாயும், கண்ணொளியும் உயிரறிவும் போல உலகத்தோடு எங்கும் உடனாய் நிற்பன்' என்பதும் முன்னர்ப் பலவாற்றான் விளக்கினோமன்றோ?

மாணாக்கன்: ஆம்; இறைவன் உலகத்தோடு ஒன்றுமாகாமல், வேறுமாகாமல் உடனாய்நிற்றலே அத்துவித இயைபு என்று அருளிச்செய்தீர்கள்.

ஆசிரியர்: ஒருவனாகிய இறைவன், பலவாய்ப் பரந்தஎல்லா உலகு உயிர்களோடும் எங்கும் உடனாய் நிற்றல் எவ்வாறு?என்று நினைந்து பார்த்தாயோ?

மாணாக்கன்: ஆம்; அதைப்பற்றி அடியேன் நினைத்துப்பார்க்கவே இல்லை.

"உலகே மெளனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"

என்று அருளாசிரியரும் இந்நிலையை வியந்து பாடுகின்றா ரன்றோ! ஒருவன் எங்ஙனம் பல விடத்தும் இருத்தல் இயலும்? இஃது ஐயத்திற்கு உரியதாய்த்தான் இருக்கின்றது.

ஆசிரியர்: ஐயம் வேண்டா; ஒருவனாய இறைவன், தனது சத்தியினால் எங்கும் நிறைந்து நிற்கின்றான் என்று உணர்.

மாணாக்கன்: அஃது எவ்வாறு? காசியில் கங்கையில் மூழ்கிக் கடமை ஆற்றுகின்ற ஒருவன், அந்த நேரத்திலேயே கன்னியா குமரியிலும் மூழ்கிக் கடமை ஆற்றுதல்என்பது எவ்வாறு இயலும்?

ஆசிரியர்: அது, நம்மனோர்க்கு இயலாது தான்; ஆயினும், இறைவனுக்கு அஃது எளிதின் இயல்வதே. அதுதான் அவனது அதிசய நிலை. அந்த நிலை தான், 'அவனது வியத்தகு சத்தி' எனப்படுகின்றது. ஆகவே, இறைவன், அன்னதொரு சத்தியை உடையவன் என்பது நன்கு பெறப்படுகின்றதன்றோ?

மாணாக்கன்: ஆம்; இறைவன் இவ்வுலக முழுவதையும் ஆக்கிக் காத்து அழித்து நடாத்தும் பெரியோனாகலின், அவன் இவ்வாறு எங்கும் நிறைந்து நிற்கும் பேராற்றலை உடையனாதல் பொருந்துவதேயாம்; எனினும், அதற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறினால் இனிது விளங்கும்.

ஆசிரியர்: ஒருவனாய் உள்ள இறைவன். பல பொருள்களி லும் நிறைந்து நிற்றற்கு எடுத்துக்காட்டுக்கள் முன்பே தரப் பட்டன. அவை, கதிரவனும் அவனது கதிர்களும்: விளக்கும் அதன் ஒளியுமாம். கதிரவனும், விளக்கும் ஒரு முதலேயாகவும், அம்முதல்களின் பெற்றிகளாகிய கதிர்களும், ஒளியும் பலவிடத் தும் நிறைந்து நிற்கக் காண்கின்றோமன்றோ! அங்ஙனமே இறைவன் ஒருவனேயாயினும், அவனது சத்தி எங்கும் நிறைந்து நிற்கும் என்று உணர்வாயாக.

இனி, 'பொருள்' எனப்படுவனயாவும், தத்தமக்கு ஏற்ற சத்திகளை உடையனவே. ஆகவே, அவ்வச்சத்தி செல்லும் அள வில் அவ்வப் பொருள்களும் நிறைந்து நிற்கும். எடுத்துக் காட்டாக, குடம், ஆடை முதலிய பொருள்கள் சிறிய சத்திகளை உடையவை; ஆதலின், அவை சிறிது இடத்தைப் பற்றிக்கொண்டு,

அவ்வளவில் நிறைந்து நிற்கின்றன. இவற்றிற்கு மேல், நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்னும் ஐம்பெரும்பூதங்கள் பெரிய சத்தியை உடையன. ஆதலின், அவை, பெரிய அளவில் நிறைவுடையனவாய் விளங்குகின்றன. பூமி மிகப் பரந்த நிறைவுடையது என்பது யாவரும் அறிந்தது. ஆனால், கடல் அதனினும் பெரிய பரப்புடையது. நெருப்பு, காற்று என்னும் பொருள்கள், மேற்கூறிய நிலம், கடல் என்பவற்றின் பரப்பிற்கு மேலும் பரவி நிற்பவையாகும். காட்சிக்குப் புலனாகின்ற நிலம், நீர் முதலியவைகளுக்கு மேலும், காட்சிக்குப் புலனாகாது நிற்கும் அவைகளது சத்திகள் பரந்து கிடக்கின்றன என்பது சாத்திரங்களின் துணிபு.

ஐம்பெரும் பூதங்களில் ஆகாயமே, பெரிது, அதுவே ஏனைய எல்லாப் பொருள்கட்கும் இடங்கொடுத்து நிற்கின்றது. அஃதாவது, பூத பௌதிகங்களாகிய பொருள்கள் யாவும் ஆகாயத்திற்குள் அடங்கி நிற்பனவேயன்றி, ஆகாயத்திற்கு அப்பாற்பட்டு உள்ளன அல்ல என்பதாம், ஆகவே, ஏனைப் பூதங்கள் உள்ள இடங்களிளெல்லாம் ஆகாயம் உள்ளது. ஆனால் ஆகாயங்கள் உள்ள இடங்களிலெல்லாம் ஏனைப் பூதங்கள் உள்ளனவாதல் இல்லை என்று உணர்தல் வேண்டும், ஏனை எல்லாப் பூதங்களின் சத்திகளையும்விட ஆகாயத்தின் சத்தி, மிகப்பெரியசத்தி என்பது விளங்கும் சத்திகளில் சிறியதைவிடப்பெரியது நுட்பம்(சூக்குமம்) ஆனதும் ஆகும். ஆகவே, ஆகாயத்தின் சத்தியை நோக்க ஏனைய பூதங்களின் சத்தி பருமை (தூலம்) ஆனவையாம்.

நாம் எளிதில் அறிகின்ற பொருள்களாகிய பூதங்களில் ஆகாயமே பெரியது: அதைவிடப்பெரியது வேறொன்று இல்லை. ஆதலின், எல்லாவற்றிலும் பெரிய பொருளாகிய இறைவனது சத்தியை ஆகாயத்தோடு ஒப்புமைப்படுத்தி வழங்குவர் பெரியோர்.

"தன் அருள்வெளிக்குளே அகிலாண்டகோடிஎல்லாம்-தங்கும் படிக்கு இச்சை வைத்து"[3] என்ற தாயுமான அடிகள் பாடலில், இறைவனது அருட் சத்தியை, 'வெளி' என்றும், அதிலே தான் அகிலாண்ட கோடிகள் எல்லாம் தங்கிக்கிடக்கின்றன என்றும் குறிக்கப்படுதலைக் காணலாம்.

பூதம் முதலிய தத்துவங்களும், அவற்றின் காரியங்களாகிய உலகங்களும், 'மாயை' என்னும் ஒரு பொருளாகும். ஆகவே, அதனது சத்தி எவ்வளவு பெரிது என்பது விளங்கும்.

இனி 'கன்மம்' என்பது, இவ்வுலகங்களில் எங்கும் செய்யப் படும் செயல்களாலும் உண்டாகி, எங்குச் சென்றாலும் அங்கு வந்து பயன் கொடுக்கக் கூடியதாய் இருத்தலின், மாயையின் சத்தியளவிற்கு, கன்மத்தின் சத்தியும் நிறைந்து நிற்றல் அறியப் படும்.

'ஆணவம்' என்ற மூல மலத்தின் சத்தி, உயிரை மறைத்து நிற்பது என்று முன்னர்க் கூறினோம். அளவில்லாதனவாகிய அனைத்து உயிர்களையும் மறைத்து நிற்பதால், உயிரின் சத்தியள விற்கு, ஆணவ மலத்தின் சத்தியும் நிறைந்துள்ளமை புலனாகும்.

'ஆணவம், கன்மம், மாயை' என்னும் பாசங்களுக்கு உள்ள னவாக அறியப்படும். இந்தச் சத்திகள் யாவும் சட சத்திகளே. அஃதாவது அறிவில்லாத சத்திகளே; இறைவனது சத்தி அப் படிப்பட்டது அன்று; அது சிற்சத்தி; அஃதாவது அறிவே வடி வமாய் விளங்கும் சத்தி.

'பாசம், பசு, பதி' என்னும் மூன்று பொருள்களின் சத்தி களில் பாசத்தின் சத்தி, சடசத்தி; அஃதாவது அறிவற்ற சத்தி. பசு, பதி இவைகளின் சத்திகள், சிற்சத்தி; அஃதாவது, அறிவு வடிவான சத்திகள். அவைகளிலும், பசுவின் சத்தி; தூல சத்தி; இதை, 'சிற்றறிவு' என்று சொல்லலாம். அஃதாவது, பசுவின், அறிவு, எந்தப் பொருளை அடைகின்றதோ அந்தப் பொருளின் தன்மையாக மாறிவிடும் தன்மையுடையது. இத்தன்மையையே,

" நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் "

என்ற உவமையால், திருவள்ளுவ நாயனார் விளக்கினார். மேலும் அது தானாக ஒன்றை அறியமாட்டாது, ஏதாவது ஒருபொருள் அதனை அறிவிக்கவே அறியும் தன்மையையும் உடையது. இவை பற்றியே அது, 'தூல சித்து' என்றும், 'சிற்றறிவு' என்றும் சொல்லப்படுகின்றது. இத்தன்மைகளாலே, பசுவினது அறிவு பாசத்தால் மறைக்கக்கூடியதாகின்றது.

பதியினது அறிவு அவ்வாறின்றி, தன்னை அடைந்த பொருள்களை எல்லாம் தன்வண்ணமேயாகச் செய்வது; தன்னை அறிவிப்பதற்கும் பிறிதொரு பொருள் வேண்டாது, தானே அறிவதன்றியும், பிறிதொன்றனை அறிவிக்கவும் வல்லது. இவைபற்றியே அது, 'சூக்கும சித்து' என்றும், 'பேரறிவு' என்றும் சொல்லப்படுகின்றது. இத்தன்மைகளால், பதியினது

அறிவு பாசத்தால் மறைக்கப்படும் தன்மையற்றதாகின்றது. இத்தகைய நுண்ணிய பேரறிவாகிய சிற்சத்தியினாலேயே இறைவன் எல்லாப் பொருள்களிலும் அவற்றின் உள்ளும் புறம்புமாய், நீக்கமற நிறைந்து நிற்கின்றான். ஏனைய பொருள்களும் ஒவ்வோர் அளவில் நிறைந்து நிற்பினும், அவை முழுநிறைவு பரிபூரணம் அல்ல. இறைவன் ஒருவனே முழுநிறைவுப்பொருள் பரிபூரணப் பொருள் ஆவன் என்று உணர்க.

மாணாக்கன் : அடிகள் அருளிய விளக்கங்கள் யாவும் இனிது உணர்ந்தேன்; ஆயினும், ஓர் ஐயம், இறைவனை, 'பரிபூரணப் பொருள்' என்று சொல்லின், அவனுக்கு வேறாக இரண்டாவது ஒருபொருள் உண்டு என்று சொல்லுதல் மாறுகோளுரையாகும் என்பர் ஒரு பொருட்கொள்கையுடையார். ஏனெனில், இறைவனுக்கு வேறாக மற்றொருபொருள் உள்ளது என்றால், அதற்குச் சிறிதாயினும் இடம் வேண்டுமன்றோ? அந்த இடத்தில் கடவுட்பொருள் இருத்தல் இயலாதன்றோ? அங்ஙனமாக, சைவ சித்தாந்தத்துள், இரண்டு பொருளுக்கு மேல், 'மூன்று பொருள் உள்ளன' என்று சொல்லி, அவற்றுள்ளும், 'பாசம் மூன்று', என்றும், 'பசுக்கள் அளவற்றன' என்றும் சொல்லிவிட்டு, இறைவனை, 'பரிபூரணப் பொருள்' என்று சொல்வது நகைவிளைப்பதாகுமன்றோ? ஆதலின், எல்லாப் பொருள்களும் இறைவனது அம்சமே - கூறுகளே என்று சொல்லிவிடுவதுதான் பொருத்தமானது போலும்!

ஆசிரியர்: இவ்வாதம் பேரறிவுடையார்க்குச் சாலவும் நகைவிளைப்பதாகும்; ஏனெனில், 'இறைவன் பரிபூரணன் எங்கும் நிறைந்தவன்' என்றால், 'எங்கும்' என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் ஒன்று வேண்டுமோ? வேண்டாவோ? 'வேண்டும்' எனில், அந்தப் பொருள் இறைவனுக்கு வேறானதோ? அன்றோ? 'வேறானதே' எனில், அதுவே சைவ சித்தாந்தத்தின் கொள்கையாம். வேறன்று; இறைவனது அம்சமே எனின், இறைவன் தன்னிலே தான் நிறைந்து நிற்பதன்றி 'எங்கும் நிறைந்தவன்' என்றல் பொருளற்றதாய் விடும். ஏனெனில்; தன்னிலேதான் நிறைந்து நிற்றல் எல்லாப் பொருள்கட்கும் உள்ள தன்மையேயாம். இனி, இறைவனுக்கு வேறாக யாதொரு பொருளும் வேண்டுவதில்லை எனின் 'பரிபூரணன்' என்ற சொல்லுக்கே இடம் இல்லாது போய்விடும். ஆகவே 'பூரணம்' என்பது, பிற பொருளின் இன்மையன்று, பிற பொருள்களும் இருக்க அவற்றின் சத்தியிலே, தனது சத்தி உடலில்

உயிர் போலக் கலந்து நிற்பதேயாகும். இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் இறைவன் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையையே,

"பண்ணில் ஓசை: பழத்தினில் இன்சுவை"

என்று திருமுறைகளும்,

" பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம்-அண்ணல்தான் "

என்று சிவஞான போதமும் கூறுகின்றன. ஆகவே, சித்தாந்தத்தின் கொள்கையை நகை விளைக்கும் என்பார் கூற்றே நகை விளைவிப்பதாதல் அறிந்து கொள்க.

மாணாக்கன்: ஆம்; இதனை அடியேன் முன்பு அறிந்திலேன்; இப்பொழுது இனிது உணர்கின்றேன்.

(தொடரும்)

---

## விசேஷ நாட்கள்

### விசுவாவசுஸ்ரீ சித்திரைமீ

13—4—65 தமிழ் வருஷப்பிறப்பு
15—4—65 சித்ரா பௌர்ணமி
17—4—65 திருக்குறிப்புத் தொண்டர் திருநக்ஷத்திரம்
24—4—65 நடேசர் அபிஷேகம்
26—4—65 திருநாவுக்கரசு சுவாமிகள் திருநக்ஷத்திரம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் ஞானபீடமேறிய திருநக்ஷத்திரம்
1—5—65 சிறுத்தொண்டர் திருநக்ஷத்திரம்
2—5—65 வேளூர்க் கிருத்திகை
3—5—65 மங்கையர்க்கரசியார் திருநக்ஷத்திரம்
5—5—65 விறன்மிண்டர் திருநக்ஷத்திரம்
12—5—65 உமாபதி சிவாச்சாரியர் திருநக்ஷத்திரம்
12—5—65 தருமையில் ஞானபுரீஸ்வர சுவாமிக்கு த்வஜாரோஹணம்
13—5—65 இசைஞானியார் திருநக்ஷத்திரம்

# சிவாகமத் தெளிவு

## கிரியை.

கிரியை என்பது மந்திரம் பாவனையுடன் கூடிய சிவ பூஜை. "மந்திரம் விநா கிரியா நாஸ்தி கர்ஷணாத்யர்ச்சனாந்திகா" என்பது காரணாகம வாக்கியம். அதாவது. மந்திரம் இல்லாமல் கிரியை இல்லை. இதுபோல பாவனையும் முக்கியம். ஆகவே மந்திரத்தை வாக்கினால் சொல்லி மனதினால் பாவித்து அவயங்களால் செய்யும் செயல்; இவைகள் மூன்றும் சேர்ந்து செய்யப்படும் சிவ பூஜையே கிரியா பாதத்தில் கூறப்படுகிறது.

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூல மல காரணத்தினாலே கன்மானுசாரமாக உண்டாகும் பிறப்பு அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் சராயுஜம் என நால்வகைப்படும். அவற்றுள் அண்டஜம் முட்டையிற்றோன்றுவன. சுவேதஜம் வியர்வையிற்றோன்றுவன. உத்பிஜம் வித்து வேர் கிழங்குகளை மேற்பிளந்து தோன்றுவ்ன. சராயுஜம் கருப்பையிற்றோன்றுவன. இவைகளின் விரி எண்பத்து நான்கு நூறாயிரம் யோநிபேதமாம். இவற்றுள் மனிதப் பிறப்பிலே வருதல் மிகுந்த அருமை.

இத்தகைய மானுடப் பிறவி வகுத்தது மனம், வாக்கு, காயங்களால் இறைவனை வழிபட்டு, சிவபூஜை செய்து மோக்ஷத்தையடைதற்பொருட்டே. இந்திரன் முதலான தேவர்களும் இங்கு வந்து அர்ச்சித்து இஷ்ட சித்திகளைப் பெறுகிறார்கள்.

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ.

- சிவஞானசித்தியார்

" துர்லபம் மாநுஷம் ஜன்ம " என்றபடி அடைதற்கரியதனை மானுடப் பிறவியையடைந்தும் சிவனைப் பூஜித்து வழிபாடு செய்யாதவர்கள் ஊன் எடுத்து உழலும் ஊமராவார்கள்.

जितेन्द्रियत्वं शौचं च माङ्गल्यं भक्तिरेव च
शङ्करे भास्करे देव्यां धर्मोऽयं मानवस्स्मृतः ।

மானிடதருமமோவெனில், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இல்லாமல் ஜிதேந்திரியராகவிருக்க வேண்டும். அதாவது மனம் முதலியவைகளையடக்கி அவை போன வழியே செல்லவிடாமல் தன் வழிக்கு இழுத்து அடக்குதல் வேண்டும், எப்பொழுதும் சுசியாய் இருத்தல், நடை உடை பாவனைகளில் எப்பொழுதும் மங்களகரமாக இருத்தல், சங்கரன் சூரியன் தேவி இவர்களிடத்தில் பக்தியாயிருத்தல் என்பது.

ஆதலால் சிவனைப் பக்தியுடன் பூஜிக்க வேண்டும். அந்த சிவ பூஜையானது ஆறு ஆதாரங்களைக் கொண்டதாகும்.

सूर्योपस्थान मात्मेज्या लिङ्गाग्नि गुरुपुस्तकम् ।
इति नित्यं समाख्यातं षडाधार शिवार्चनम् ॥

— வருணபத்ததி.

சூரிய பூஜை, ஆன்ம பூஜை, அக்னி காரியம் சிவலிங்க பூஜை ஆசாரிய பூஜையுடன் புஸ்தக பூஜை தினம் தினம் செய்ய வேண்டியது. ஷடாதார சிவார்ச்சனமாகும்.

பொதுவாக, பூஜை ஆன்மார்த்த பூஜை பரார்த்த பூஜை என இரண்டு வகை, அவற்றுள், சமய விசேஷ தீக்ஷை பெற்ற யாவரும் ஆசாரியனால் அளிக்கப்பட்ட க்ஷணிகலிங்கம் அல்லது சலலிங்கம், ஸ்தண்டிலம், மண்டலம், கௌதுகம் பித்தி சித்திரங்களில் ஏதாவதொன்றில் ஆன்மார்த்த பூஜையைச் செய்ய வேண்டும்.

நிர்வாண தீக்ஷையுடன் ஆசாரியாபிஷேகம் பெற்ற ஆதி சைவனைக்கொண்டு பரார்த்த பூஜை செய்விக்க வேண்டும். மற்றவர்களுக்குப் பரார்த்த பூஜையில் அதிகாரம் கிடையாது.

அயன்முகத்திற் றோன்றிய வந்தணரர்ச் சித்துப்
பயனடைதற் கிட்டலிங்கம் பாங்கு 436

பாங்கில்லை தீண்டப் பரார்த்த மவர் தீண்டிற்
றீங்குலகுக் காமென்று தேறு. 437

சைவ சமய நெறி

வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றோராகிய மகா சைவர்கள் பூசித்து முத்தி பெறுதற்கு இட்டலிங்கமே உரித்தாம்.

அவர் பரார்த்தலிங்கத்தைத் தீண்டுதற்கு விதியில்லை. தீண்டினர்களாயின், உலகத்துக்குத் தீங்குண்டாமென்றறிக.

ஆன்மார்த்த பூஜைக்குரிய க்ஷணிக லிங்கம் என்பது மணல் அக்ஷதை, அன்னம், ஆற்றுமண், கோமயம், வெண்ணெய் ருத்ராக்ஷம், விபூதி, சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, வெல்லம் என்ற இந்தப் பன்னிரெண்டு திரவியங்களால் இலிங்கம் செய்து ஏதாவதொன்றில் ஆன்மார்த்த பூஜையைச்செய்யலாம், இந்த க்ஷணிக லிங்கங்களுக்கும் பீடத்திற்கும் இலிங்கத்திற்கும் அளவுலக்ஷணம் வேண்டியதில்லை. மாவிலும் பழத்திலும் இலிங்கம் பூஜிக்கப்படலாம் என்றும் ஓர் ஆகமம் கூறுகிறது.

सिकतं तण्डुलं चान्नं द्विजेनैव समर्चितम् ।
नदीमृत्गोमयं चैव नवनीतं नृपेण तु ॥
वैश्येन पूजितं चैवं फलं पिष्टं च चन्दनम् ।
शूद्रेण पूजितं चैव कूर्चं माल्यं गुळं भवेत् ॥ - அஜிதாகமம்

மணல், அக்ஷதை, அன்னம், இவைகளாலான இலிங்கம் அந்தணர்களாலும், ஆற்று மண், சாணம், வெண்ணெய் இலிங்கம் க்ஷத்திரியர்களாலும், பழம், மாவு, சந்தனலிங்கங்கள் வைசியர்களாலும், கூர்ச்சம், மாவிலை, வெல்லம் என்ற இந்த இலிங்கங்கள் சூத்திரர்களாலும் பூஜிக்கப்பட வேண்டும்,

சலலிங்கம் என்பது சைலஜம், லோஹஜம், ரத்னஜம் என்று மூன்று விதமாகும். இந்த இலிங்கங்கள் பஞ்ச சூத்திர முறைப்படி அமைந்திருக்க வேண்டும்.

லிங்கத்தைச் சூழ்ந்துபுடை யிற்பருமை பண்ணிடுக
வங்கதுபீ டத்தினக லம் - 110
ஐந்துகூ றுக்கவத னைப்பீடத் துன்னதநான்
கொன்றுசிவ லிங்கோன் னதம்
ஐந்துகூற் றிற்பாதி கோமுகைகண் டப்பருமை
யைந்துமதன் பாதியுமே யாம்.

சைவ சமய நெறி

முதற்கண் சிவலிங்கத்தைச் சுற்றி அதனது சுற்றுப்பருமையை யளக்க அது எவ்வளவோ அவ்வளவே பீடத்தினகலமாகும்.

அதை ஐந்து கூறு ஆக்கி அதனுள் நான்குபாகம் பீடத்தின் உயர மாகும். அவ்வைந்தில் பாதி கோமுகத்தின் நீளம். ஐந்தில் ஒருபங்கு இலிங்கத்தின் உயரமும் கோமுக அளவின் ஒன்றைரைப் பங்கு கண்டத்தின் சுற்றளவு. இதற்குத்தான் பஞ்ச சூத்திர விதி என்று பெயர். இம்முறைப்படி சைலஜம் முதலிய இஷ்டலிங்கங்கள் இருக்க வேண்டும்.

க்ஷணிக லிங்கங்களுக்கு ஆவாஹனம் முதலியவை செய்து முடிவில் விசர்ஜனம் செய்ய வேண்டும். அந்த க்ஷணிக லிங்கத் திற்கு நிவேதனம், அவல், வெல்லம், பயற்றம்பருப்பு, பழங்கள் ஆகும்.

क्षणिकानां निवेद्यं च पृथुकं गुळमुद्गकम्।
फलादि चैव संप्रोक्तं ... ... ... ... ॥

- அம்சுமான்

ஆசௌசகாலங்களிலும் கூட சிவபூஜையை விடாமல் செய்ய வேண்டும். பூஜாகாலத்தில் தாமரை இலையிலுள்ள நீர் போல் ஆசௌசம் அவர்களைத் தொடராது. பூஜாலோபம் ஒரு பொழுதும் கூடாது. ஆசௌச காலத்தில் காம்யமான பூஜை களைச் செய்யக்கூடாது.

சிவபூஜையானது சுத்தம், கேவலம், மிச்ரம் என மூன்று பேதமாகும்.

சுத்தம் சிவலிங்க மொன்றுமே சுந்தரியு
மொத்துறைதல் கேவலமென் றூர். 472

அருக்கன் கரிமுகவ னாதிசண் டாந்தம்
விரித்தருச்சிக் கைமிச்சி ரம். 473

- சைவ சமய நெறி

சிவலிங்கம் ஒன்றை மாத்திரம் பூசித்தல் சுத்த பூசையாகும். அவ் விலிங்கத்தோடு உமாதேவியையுங் கூட்டிப் பூசித்தல் கேவல பூஜையாகும். விநாயகர் கந்தர் இடப தேவர் என்னும் இம் மூவரையும் அவ்விருவருடன் கூட்டி ஐவராகப் பூசித்தலும் கேவல பூசையெனப்படும். சூரியன் விநாயகர் முதலாகச் சண்டேசுரர் இறுதியாக விரித்து அருச்சிக்கை மிச்ர பூசை எனப்படும்.

अग्निकार्यो जपो योगो यागो दीक्षा षडानन ।
गुह्ये मनोरमे स्थाने सुविशुद्ध महीतले ॥

– ஸர்வஞானோத்தரம்

அக்னிகார்யம், ஜபம், யோகாப்பியாஸம் யாகம் தீக்ஷை இவைகளை ஜனக்கூட்டமில்லாததாயும் மனோகரமாயும் சுத்தமாயுமுள்ள விடத்தில் செய்ய வேண்டும். சகல மூர்த்தியான சூரியனைப் பூஜித்துப் பிறகு நிஷ்களமூர்த்தியான சிவஉபாசனை (சிவலிங்க பூசை) செய்ய வேண்டும்.

தான் அஸ்திரமயமான கூண்டிலிருப்பதாகப் பாவித்து, பிருதிவி தத்துவம் முதலான தத்துவங்களைக் கடந்து சுத்த வித்யா தத்துவத்தில் வியாபித்திருப்பதாக அத்தப் பூஜா ஸ்தானத்தை எண்ணி, முதலில் சூரிய பூசை செய்ய வேண்டும். கிழக்கு முகமாகவிருந்துகொண்டு சூரிய பூசையை விதிப்படி செய்துமுடித்து வடக்குமுகமாகப் புலித்தோல் முதலிய ஆசனத்திலிருந்து, பீடத்தின் மேற்கே துவாரமாகப் பாவித்து அங்கே கணபதி, சரசுவதி இலக்குமி, நந்தி, கங்கை, மகாகாளர், யமுனை என எழுவர்களையும் பூசித்து, ஆன்ம சுத்தி, ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி எனும் பஞ்சசுத்திகளையும் விதிப்படி செய்ய வேண்டும்.

அந்தர் யாகம் செய்யாது சிவபூசை செய்வது வீண்.

" சிறந்தகத்துள் ஆன்மாவில் உறை சிவனைப் பூசையினைச்
செய்யா னாகி
மறந்துபுறத் தினிற்பூசை வருந்தியே யியற்றுபவன்
வயங்கு மாவின்
கறந்தபா லடிசிலகங் கையுளே யிருப்பதுதான்
கண்கு றாது
புறங்கையினை நக்கு மவன் போலுமால்
புகலுங் காலே "

சிவதர்மம்.

आत्मस्थं यश्शिवं त्यक्त्वा बहिष्टं यजते शिवम् ।
हस्तस्थं पिण्ड मुत्सृज्य लिहेत्कूर्पर मात्मनः ॥

சிவ தர்மம்.

ஆத்மாவினுள் இருக்கும் சிவனைப் பூஜியாமல் விட்டு வெளியில் மாத்திரம் பூஜிப்பவன் கையிலுள்ள கவளத்தை விட்டு முழங்கையை நக்குபவன் போலாகும் என்று விதி காணப்படுவதால் அந்தர்யாகம் செய்து பாஹ்ய பூசை செய்ய வேண்டும்.

ஆன்மார்த்த லிங்கம் வைக்கும் பெட்டியில் பீமருத்ரரைத் தியானித்து புஷ்பம் சாத்தி பெட்டியைத் திறந்து இஷ்ட லிங்கத்தை எடுத்து, ஸ்நான வேதிகையில் வைக்க வேண்டும்.

ओं नमो देव देवेश सर्वलोकैक नायक ।
उत्तिष्ठ स्नान कर्मार्थं आत्मरक्षार्थमेवच ॥

ஹே, தேவாதிதேவனே எல்லாவுலகத்திற்கும் நாயகனே நமஸ்காரம். ஸ்நானத்திற்கும் ஆன்மாவை ரக்ஷிக்கும் பொருட்டும் எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு இலிங்கத்தை கையினுல் எடுக்க வேண்டும்.

ஒருபொழுதும் இலிங்கத்தின் சிரசில் புஷ்பமில்லாமலிருத்தல் கூடாது. ஆதலால் சிறு விரல் மோதிர விரலிடுக்கில் புதிய புஷ்பத்தை வைத்துக்கொண்டு பெருவிரல் ஆள்காட்டி விரல்களால் நிர்மால்ய புஷ்பத்தை எடுத்து விட்டு அதே சமயத்தில் முன் வைத்துக் கொண்ட புதிய புஷ்பத்தை இலிங்கத்தின் சிரசில் வைக்க வேண்டும். பின்னர், தைலபஞ்சாமிருதம் முதலியவைகளால் அபிஷேகம் செய்து வஸ்திரம் சந்தனம் புஷ்பம் சாத்தி பஞ்சாசன பஞ்சாவரணத்துடன் பூஜை செய்ய வேண்டும்.

பாங்கல்ல எண்ணெய் படிகத்தி னுக்கானெய்
பாங் கென்றே யாட்டுகவன் பால் 510

சைவ சமய நெறி

படிகலிங்கத்திற்கு எண்ணெய் உரித்தன்று, பசுவின் நெய்யே உரித்து.

இஷ்ட லிங்கத்திற்கு ஸ்நான வேதிகையிலே சலாசனமும், ஸ்நானவேதிகையினின்றும் பீடத்திலெழுந்தருளப் பண்ணிய பின்பு ஸ்திராசனமும் பூசிக்கவேண்டும். சலாசனம் என்பது அனந்தாஸனத்துடன் தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம், பத்மம் என்ற ஆறுமாகும், ஸ்திராஸனம் என்பது ஆதாரசத்தி முதல் குடிலாசத்தியீருக அர்ச்சிப்பது, பிறகு நியாசம் செய்து சத்யோஜாதம் முதலான மந்திரங்களால் ஆவாகனம் ஸ்தாபனம்

சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டம் செய்து சுவாக தார்க்யம் கொடுத்து. ஷடங்கங்களை நியசித்து, தேனுமுத்ரை மகாமுத்ரை, பஞ்சமுகிமுத்திரை காட்டி பாத்யம், ஆசமனீயம், அர்க்கிய முதலான உபசாரங்கள் செய்யவேண்டும்.

“ இருகை கூட்டி யிடையிடை கோத்த
விரல்களிற் றர்ச்சனி விரல்மத்திமை களை
யார்த்திடக் கனிட்டை யனுமிகை கனிறற்
சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே ”

வலக்கைச் சிறுவிரலால் இடக்கை அணிவிரலையும் இடக்கைச் சிறுவிரலால் வலக்கை அணிவிரலையும் வலநடு விரலால் இடச் சுட்டு விரலையும் வலச்சுட்டு விரலால் இட நடுவிரலையும் நுனி யோடு நுனி பொருந்தச் சேர்க்கத் தேனு முத்திரையாகும். இது சுரபி முத்திரை எனவும் அமிருதமுத்திரை யெனவும்படும். இரு கரங்களையும் விரித்து நிமிர்த்திப் பாதம் முதல் சிரசு வரையுங் காண்பிப்பது மகாமுத்திரையாகும்,

இரு கைவிரல்களையும் எதிர்முகமாக உள்ளுறச் செருகிச் சுட்டு விரல்களால் நடுவிரல்களையும், பெருவிரல்களால் சிறு விரல்களையும் பிடித்து, அணிவிரல்களைச் சேர்த்து நடுவில் நீட்டுவது பஞ்சமுக முத்திரையாகும்.

இவ்வாறு முதல் ஆவரணத்தில் பூஜிக்கப்படும். பிரும்மாங் கங்களுக்கு, தேனு, பத்மம், திரிசூலம், மகரம், சுருக் நமஸ்கார முத்திரைகளையும் வித்யேச்வரர்களுக்கும், கணேச்வரர்களுக்கும் காளகண்டி முத்திரையும், லோகேச்வரர்களுக்கும், கணேச்வரர் களுக்கும் திரிசூல முத்திரையும் காண்பிக்கவேண்டும். பிறகு, தூபதீபம் நைவேத்யம் சத்திரம் சாமரம் முதலிய உபசாரம் செய்து கற்பூரஹாரத்தி கொடுத்து, பஸ்மரக்ஷணை சாந்தி ஜபம் செய்து சமர்ப்பணம் செய்யவேண்டும், வித்யாபீடம் குருபாதம் வணங்கவேண்டும்.

शिवं संपूज्य विधिवत् तद्विद्यां पूजयेत्ततः ।
गुरूंश्च शिवभक्त्यातु तुल्यमेतत्त्रयं यतः ॥
यथा शिवस्तथा विद्या यथा विद्या तथा गुरुः ।
शिवविद्या गुरूणां च पूजायास्सदृशं फलम् ॥
नान्यत्रविद्यते—

—சிவதருமோத்தரம்.

சிவபூஜை முடித்து வித்யாபீட பூஜையும், குருபூஜையும் செய்ய வேண்டும். சிவன் வித்யாபீடம் குரு மூன்றும் சமானமுள்ளவை. இம்மூன்று பூஜைக்குச் சமமாக எதுவும் இல்லை.

ஆன்மார்த்த இலிங்கத்திற்கு நிவேதிக்கப்பட்டது. நிர்மால்யமாகாது. ஆதலால் அதனை நாடோறும் விருப்பமுடன் நியமமாகப் புசிக்கின் இன்பமுண்டாகும். புத்திரர் மித்திரர் பாரி முதலாயினோர் புசித்தாலும் அவர்களிடத்து உண்டாகிய பாவம் நீங்கி ஞானம் உண்டாகும்.

சிவார்ச்சனம் செய்தவுடன், கபிலா பூஜை செய்ய வேண்டும் என்று சில ஆகமம் கூறுகிறது. அதன் பிறகு பரார்த்தாலய தரிசனம் செய்து போஜனம் செய்ய வேண்டும்.

சோமசம்பு.

रात्रौ पूजां च दानं च बुभुक्षुः परिवर्जयेत् ।
विना चन्द्रोपरागार्चां विना सिद्धिं समीहिताम् ॥
विना प्रदोषपूजां च विना शिव निशार्चनम् ।
पूजयित्वा प्रमादेन गायत्र्यष्ट शतं जपेत् ॥

புபுக்ஷுவானவன் சிவபூஜையை இரவில் செய்யக்கூடாது. அவ்வாறே தானமும் செய்யக்கூடாது. கிரஹணம் பிரதோஷ பூஜை, சிவராத்திரிபூஜை, காம்யபூஜை இவைகளை இரவில் செய்யலாம். நித்தியபூஜையை இரவில் செய்யநேர்ந்தால் பிராயச்சித்தமாகக் காயத்ரியை எண்ணுயிரம் ஆவர்த்தி ஜபம் செய்யவேண்டும்.

சிவ நிர்மால்யத்தைத் தாண்டினுல் அகோரமந்திரத்தைப் பதினுயிரம் ஆவர்த்திஜபம் செய்யவேண்டும் நிர்மால்யத்தை உட்கொண்டாலும், விற்ருலும் இதற்குச் சமமாகவே ஜபம் செய்யவேண்டும்.

देवस्वं देवताद्रव्यं नैवेद्यं च निवेदितम् ।
चण्ड द्रव्यं च निर्मल्यं निर्माल्यं षड्विधं भवेत् ॥

—சோமசம்பு பத்ததி.

(1) சுவாமிக்கு விடப்பட்ட பூமி, கிராமம். (2) இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வஸ்திரம், ஆபரணம் முதலானவை, (3) இறைவனுக்கு நிவேதனம் செய்யப் பாகம் செய்யப்பட்டவை. (4) இறைவனுக்கு நிவேதனம் செய்தவை. (5) சண்டேசுரருக்கு நிவேதனம் செய்தவை. (6) வெளியில் போடப்பட்ட புஷ்பம் முதலானவை இந்த ஆறும் நிர்மால்யமாகும்.

இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட சந்தனம் அன்னம் பானம் முதலியன ஸர்வபாபஹரமாதலால் இவற்றிற்கு நிர்மால்ய தோஷமில்லை. போஜ்யமாகும் இவைகளை நிர்மால்யம் என்று நீக்கினால் கங்கை, சந்திரன், மழை, முதலியவையும் நிர்மால்யமாகும். அவைகளிலிருந்து உண்டாகும் யாவையும் நீக்கும்படி நேரும் ஆதலால் இவைகள் நிர்மால்யமல்ல.

(தொடரும்)

## சிற்றறம்

1 வீணாகத் துரும்புகளைக் கிள்ளுதலும், சிறுமண்கட்டிகளை உடைத்தலும் ஆகாது

2 தருப்பை. வெற்றிலை இவைகளைத் தரையில் வைத்தலாகாது

3 கையினால் நீர் பருகலாகாது

4 நீரில் காரியுமிஷ்தல், மலஜலம் கழித்தல் முதலியன கூடாது

5 பாத்திரத்தில் நீரை எடுத்தே சௌசம் செய்தல் வேண்டும்

6 கழுதை, ஆடுகளின் கால் தூசியும் துடப்பத்தின், தூசியும், பெண்களின் பாததூசியும் உடலில் பட்டால் செல்வத்தை யழிக்கும்

# "அன்னையும் ஐயனும்"

வித்துவான், திருமதி வசந்தா வைத்தியநாதன்

" ஸிந்தூராருண விக்ரஹாம் த்ரிநயனும்
மாணிக்ய மௌளிஸ்புரத்
தாராநாயக சேகராம் ஸ்மிதமுகீம்
ஆபீன வக்ஷோரு ஹாம்
பாணிப்யாமலி பூர்ண ரத்ன சஷகம்
ரக்தோத் பலம் பிப்ரதீம்
ஸௌம்யாம் ரத்ன கடஸ்த ரக்த சரணும்
த்யாயேத் பராமம்பிகாம் "

(ஸ்ரீ லலிதாம்பிகா த்யானம்)

இதன் பொருள் :- சிந்தூரம் போலச் சிவந்த உடலும் முக்கண்ணும், சந்திரன் ஒளிரும் மாணிக்கக் கிரீடமும், சிரித்த முகமும், பெருத்த தனபாரமும், மது நிறைந்த இரத்தினக் கோப்பையும், செங்குவளை மலர் ஏந்திய கைகளும், இரத்தின கவசத்தில் பொருந்திய செவ்விய திருவடிகளும் உடைய அழகுத் தெய்வமான அன்னையைத் தியானம் செய்ய வேண்டும்.

**அருள் உருவான அன்னை :**

கிறிஸ்துவர்கள் கடவுளைப் "பரலோகத்தில் உள்ள பிதா' என்றும், முகம்மதியர்கள் இறைவனை "ஆண்டவன்" என்றும் அழைக்கின்றனர். ஆனால் இந்துக்களோ உலகில் உள்ள பொருட்கள் அனைத்திலும் ஆண்டவனைக் காண்கின்றனர். தாயுமானவர்.

" பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன் "

என்கிறார். நம் முன்னோர்கள் ஐம்பெரும் பூதங்களிலும் ஆண்டவனின் தன்மையைக் கண்டனர். அனைத்து உறவுமுறைகள்

வாயிலாகவும் அண்ணலை அணுகினர், அத்தகைய உறவுகளுள், தாயாகக் காணுதலையே தலை சிறந்ததாகக் கருதினர். தாய்க்கும் மகவிற்கும் உள்ள இணக்கம் வேறெங்கும் காண இயலாத தொன்றாகும். உலகில் தாய்க்கு உவமையாகக் கூற எப் பொருளுமில்லை. ஆண்டவனை ஆண்டானாகவும், நம்மை அடிமை யாகவும் கொண்டால், அச்சத்துடன் விலகி நிற்க வேண்டும். தந்தையாக உவமித்தால், வயது முதிர முதிர, தந்தைக்கும், தனயனுக்கும் இடைவெளி அதிகமாகின்றது. ஆனால் தாய்க்கோ என்றும் தனது மகன் குழந்தையாகவே தோன்றுகின்றான். அவன் செய்யும் குறைகளையும் நிறையாகவே காணும் மனப் பாங்கு தாய்க்கு இயல்பாகவே உள்ளது.

ஆதலால் தெய்வத்தைத் தாயாகவே காணுகின்றோம். இதனைத் தாயுமானவர்,

> "கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்
> கென்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே"

என்று துதிக்கின்றார். ஆளுடைய அடிகளும் இறைவனை,

> "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"

என்றும்,

> "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"

என்றும்,

> "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து"

என்றும் குறிக்கின்றார்.

இனி, பார்க்கும் திசைதொறும் நீக்கமற நிறைந்திலங்கும் பராசக்தியின் பெருமையினை ஒரு சிறிது ஓர்வோம்.

**ஐந்தொழில் புரியும் அகிலாண்ட நாயகி :**

நீராரும் கடல் உடுத்த இந்நில உலகத்தை ஆக்கி அளித்து, அழிக்கும் கடவுளர் மூவர். அவர்களை முறையே அயன், மால், அரன் என்கிறோம். இவர்களுக்கு இத்தொழில்களை இயற்ற சக்தி தருபவள் அன்னையே,

மேலும் அன்னையே, ஐயனுடன் கலந்து ஒன்றி, படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மறைத்தல் என்ற ஐந்தொழில் களையும் நிறைவேற்றுகின்றாள். இதனை,

"பஞ்ச க்ருத்ய பராயணாயை (पञ्चकृत्यपरायणायै)"

என்று லலிதா ஸஹஸ்ரநாமம் இயம்புகின்றது.

"பரையாதி விருப்பறிவு தொழிலாகி உலகமெல்லாம்
படைத்துக், காத்து, வரையாது துடைத்து மறைத்தருள்"

என்றபடி முறையே, பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி யாகி, ஐந்தொழில்களை நினைத்த மாத்திரத் திலே இயற்றுகின்றாள். இஃது அன்னைக்கோர் விளையாட்டே.

"உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன புவனாவல்யை"
(उन्मेष निमिषोत्पन्न विपन्न भुवनावल्यै)
(லலிதா ஸஹஸ்ரநாமம்)

அன்னை தனது கண்ணை இமைப்பதனால் (மூடித்திறப்பதனால்) உலகம் உருவாகி, அழிகின்றது. கண் இமைத்தல் விரைவாக நிகழ்வது போன்று, இந்நில உலகைப் படைத்து, அழிப்பது விரைவாகவும், விளையாட்டாகவும் நிகழச் செய்கின்றாள்.

இக்கருத்தினை எதிரொலிப்பதுபோல் குமரகுருபரரும், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில்,

"சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கா னிறுத்திமேருத்
தூணென்று நடுநட்டு வேளிமுகடு மூடியிரு
சுடர் விளக்கிட்டு முற்ற
எற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கலம்
எடுத்தடுக்கிப் புதுக்கூழ்
இன்னமுத முஞ்சமைத் தன்னை நீபன்முறை
இழைத்திட வழித்தழித்தோர்

முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடும்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே ''

என்று குறிப்பிடுகின்றார். சக்ரவாளகிரியாகிய சுவர்க்கிசைய எட்டு குலாசலஸ்களைத் தூணாக நிறுத்தி, மேருவை மையத் தூணாக நாட்டி, ஆகாயத்தையே கூரையாக அமைத்து, சூரிய சந்திரர்களையே இருளகற்றும் ஒளிச்சுடர்களாகக் கொண்டு, இப்புவனமாகிய பழைய பாத்திரத்தைப் பிரளயகால வெள்ளத் திற் கழுவி, மறுபடியும் சிறு சோறு சமைத்துச் சிற்றிலிழைப் பதை அடியார் அழகுற வர்ணிக்கின்றார்.

**சக்தியினின்றே சிவம் :**

ஆகையால் சக்தி தத்துவத்தினின்றே சிவ தத்துவம் தோன்றியதென்பது மேற்கூறியவாற்றால் போதரும்.

இக்கருத்தினை அடியொற்றியே அருணந்தி சிவாச்சாரியாரும்

'' சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான்
சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி
ரெல்லா மீன்றும்
பவன்பிர மசாரி யாகும்பான் மொழி
கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மை
தான் தெரியுமன்றே.

(சிவஞானசித்தியார் சுபக்கம் 77)

என்கிறார். அபிராமிபட்டரும், அபிராமி அந்தாதியில்

"பூத்தவளே புவனம் பதி ஞன்கையும்
பூத்த வண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற் கிளேயவளே
மாத்தவளே உன்னை யன்றி மற்ருேர்
தெய்வம் வந்திப்பதே"

என்று துதிக்கின்ருர். ஆகையால் சக்திவேறுசிவன் வேறு இல்லை இதை விளக்குதற்கு இதோ மற்ருேர் சான்று. அன்னையை

"பஞ்சப்ரேதாஸனுஸீனயை" (पञ्च प्रेतासनासीनायै)

என்று லலிதா ஸஹஸ்ரநாமம் செப்புகின்றது. பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசானன் என்ற நால்வரும் தேவி அமரும் ஆஸனத்திற்கு நான்கு கர்ல்களாகவும், சதாசிவன் பலகையாக வும் இருக்கிருர். மேற்கூறிய ஐவரும் தத்தம் சக்திகளுடன் பராசக்தியை வணங்கும்பொழுது "பஞ்ச ப்ரும்மாஸந "ராகவும் சக்திகள் அவர்களை விட்டு நீங்கும்பொழுது பஞ்சப்ரேதாஸன மாகவும் மாறுகிருர்கள்.

இதைப் படிக்கும்பொழுது உலகெலாம் ஈன்ற அன்னை தனது கணவன்மீது அமர்வது முறையா என்ற ஓர் ஐயவினு எழுவது இயற்கை. தேவியின் தத்துவம் ஆத்ம தத்துவம். உலக ஸ்ருஷ்டி க்ரமத்தில் நாம் நற்கதி அடைய நிர்குணப் ரும்மம். ஸகுணமாய் நாம ரூபத்துடன் தோன்றுகின்றது. இதனை சாக்தர் "சக்தி" என்றும், சைவர்கள், "சிவனென்றும், வைஷ்ண வர்கள் "விஷ்ணு" என்றும் கூறுகின்றனர், இந்த சகுணப் ரும்மமே லலிதா, இராஜேஸ்வரி என்று அழைக்கப்படுகின்றது.

இச்சக்தியினின்று பிரிக்க முடியாததே சிவம். ஆகையால் இருவருமே "பஞ்சப்ரும்மாசனம்" அல்லது "பஞ்சப்ரேதாசனத் தில் அமர்பவர்கள். ஒரே தத்துவத்தில் இரண்டு சொரூபங் களும் அடங்கியுள்ளன. அசைவற்றிருக்கும் அறிவு வடிவைச் "சிவன்" என்றும் அசைவுள்ள செயல் வடிவே "சக்தி"

என்றும் அழைக்கின்றோம். இறுதிப் பிறவியிலேதான் தேவியினிடத்துப் பற்று உண்டாகுமென சாத்திரங்கள் இயம்பாநிற்கின்றன.

**அன்னையினின்று தோற்றும் அகிலம் :**

தேவி யராசக்தியிடமிருந்து தோற்றம் பெற்றதே அனைத்துயிர்களும்.

" ஆ ப்ரும்ம கீட ஜனன்யை' (आब्रह्म कीट जनन्यै)

என்றும்,

" அநேக கோடி ப்ருஹ்மாண்ட ஜனன்யை "
(अनेककोटि ब्रह्माण्ड जनन्यै)

என்றும்,

" ஸதஸத் ரூப தாரிண்யை " (सदसत्रूप धारिण्यै)

" அஷ்ட மூர்த்யை " (अष्टमूर्त्यै)

என்றும் லலித ஸஹஸ்ரநாமத்தில் வருதல் காணலாம்.

1. பூமி, நீர், தீ, வாயு, ஆகாசம், சந்த்ரன், சூரியன், யாகம் செய்பவர் உடல் முதலிய தோற்றமாகவும் (2) ஜீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மா, சுத்தாத்மா, க்ஞானாத்மா, மஹாத்மா, பூதாத்மா, ஆத்மா, முதலிய வடிவாகவும், (3) ஐம் பூதங்கள், மனம், புத்தி, அஹங்காரம் முதலிய உருவேற்றும், (4) கணிகா, சௌண்டகீ, கைவர்த்தீ, ரஜகீ, தந்த்ரகாலீ, சர்மகாரீ, மாதங்கி, பும்ஸ்சலீ ஆகிய பலவகையான மூர்த்திகளாகவும் தேவி உருவேற்கிருள் என்று லலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது.

**அன்னையும் கன்னிமையும் :**

பிரும்மா முதல், புழு வரை பலகோடி உயிர்களைப் படைத்தும், அன்னை மாருத கன்னிமைக்கோலத்துடனேயே கொலு வீற்றிருக்கின்ருள். இதனையே தாயுமானவ அடிகள்,

"பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி, புராந்தகி
த்ரியம்பகி யெழில்
புங்கவி, விளங்குசிவ சங்கரி ஸஹஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி, மனுதீத நாயகி. குணதீத நாதாந்த
சக்தி என்றுன்
நாமமே உச்சரித்திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆறணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே, பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைரா சனுக் கிருகண் மணியாயுதித்தமலை
வளர்கா தலிப்பெண்உமையே"

என்று வியந்து போற்றுகின்றார்.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிமையாய் திகழ்பவள் அன்னை பரா சக்தி. இயற்கையின், சக்திக்கு அழிவில்லை என்பதனையே பௌதிக நூல் வல்லுநரும் (Conservation of energy) சக்தியின் ரக்ஷணம் என்பர்.

அண்டகோடிகளை ஈன்றும் நிறையழியாது என்றும் ஒரே பெற்றியாய், அன்னையாகவும், கன்னியாகவும் நின்று அருள் வழங்கும் பராசக்தியின் பாதப்போதுகளைப் பணிவோர் எல்லா நலன்களும் பெறுவர் என்பது திண்ணம்.

"தனந்தரும் கல்வி தரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும் அன்பர்என்பவர்க்கே
கனந் தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக் கண்களே"

(அபிராமி அந்தாதி)

# புகழுக்கும் இறுதி உண்டோ!

வித்துவான். திருமதி. ப. நீலா.

'வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னும்
எச்சம் பெறுஅ விடின்.'

அழியுமுடல் கொடுத்து அழியாப் புகழைத் தேடிக்கொள்ளும் ஆற்றல் போர்க்கள வீரர்களுக்கே உண்டு என்று எண்ணுதல் மடமையிலும் மடமை. வீரனைப் பொறுத்த வரையில் இது அவ னுக்கு ஓர் விளையாட்டே.

'அடிக் கழுத்தின் நெடுஞ் சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ'

கலிங்கப் போரிலே காளி வழிபாடு இது. தம்முடைய உயிரைச் சிறிதும் மதிக்காத மாவீரர்கள் செய்யும் வீர வழிபாடு.

சுழலும் இசைவேண்டி உழலும் உயிரைப் போக்கிக்கொண்ட பெருந்தன்மையாளர் வரிசையிலே வைத்துஎண்ணப்படும் ஏற்ற முடையவர் ஏயர்கோன் கலிக்காமர். பீடு தங்கிய திருப்பெரு மங்கலத்திலே 'நிதியமாவன நீறுகந்தார் கழல்' என்ற மன நிறைவோடு இல்லறம் நடாத்திய இவரின் மன உறுதியை, மதி யணிந்தபிரான் சோதிக்கத் தொடங்கினர். உலகில் பரவிய பழிச்சொல் ஒன்று கலிக்காமரின் காதிலும் ஒருநாள் விழுந்தது. வார்த்தைகளைச் செவிமடுத்ததும் வெம்பினர், அதிசயித்தார், வெருவினல் விளம்பலுற்ருர்.

நாயனே அடியான் ஏவுங் காரியம் நன்று சால
ஏயும் என் றிதனைச் செய்வான் தொண்டனும் என்னே பாவம்
பேயனேன் பொறுக்க ஒண்ணுப் பிழையினைச் செவியால் கேட்ப
தாயின பின்னும் மாயா திருந்ததென் ஆவி என்பார்

ஏயர்கோனின் உள்ளம் இப்படி வெம்பி நோகும்படியாக நடந்த காரியம் தான் என்ன? திருவாரூர் திருவீதி, அருகு

சூழ்ந்தார் துயின்று. திருஅத்தயாமப் பணியும் அடங்கியநேரம். பெருகுபுவனம் சலிப்பின்றிப் பேயும் உறங்கும் நள்ளிரவு.

'முன்னே வினையால் இவ்வினைக்கு
மூலம் ஆனுள் பால் அணைய
என்னை உடையாய் நினைந்தருளாய்
இந்த யாமத் தெழுந்தருளி
அன்னம் அனையாள் புலவியினை
அகற்றில் உய்யலாம் அன்றிப்
பின்னை இல்லைச் செயல் '

என்று விண்ணப்பித்துக்கொண்ட வன்தொண்டரை நோக்கிப் பெருமான் துன்பம் ஒழிநீ யாம் உனக்கோர் தூதனுகிப் பொன் செய் மணிப்பூண் பரவைபால் போகின்றோம் என்று அருள் செய்தார். அடியார் ஒருவரின் துன்பத்தைத் துடைப்பதற்காக ஐயன் ஆரூர் வீதிகளில் நடக்கின்றார், திருவடிகளிலே கிடந் தொலிக்கும் சிலம்புகள் அரியையும் அயனையும் அழைக்கின்றன வாம். மறைகளும், மாலும் - மலரவனும் காணுத மலர்த்தாள்கள் இதோ மண்தோய நடக்கின்றன என்கிறூர் சேக்கிழார்பெருமான்.

" மாலும் அயனும் காணுதார்
மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சும்
காலம் இதுஎன் றங்கவரை
அழைத்தால் என்னக் கடல் விளைத்த
ஆலம் இருண்ட கண்டத்தான்
அடித்தா மரைமேல் சிலம் பொலிப்ப ''

பெருமான் நடந்தருளினுர். சிவபிரான், அடியார் பொருட்டு படும் துன்பம் தான் எத்துணை! பக்தி வலையில் பட்டது தான் இவற்றிற்கெல்லாம் காரணம், இவ்வாருக நடந்த செய்திதான் கலிக்காமர் உள்ளம் வெருவக் காரணமாக அமைந்தது. நம்பி யாரூரர் நெஞ்சில் நடுக்கம் ஒன்று இன்றித் தம்பிராணுரைத்தையல் பால் தூதுவிட்டதையும், பாரிடை நடந்து செய்ய பாததாமரை கள் நோவத், தேரணி வீதியூடு செல்வதும் வருவதுமாகி ஓரிர வெல்லாம் பெருமான் தூதுக்கு உழன்ற திறத்தையும் உன்னி உளம் நொந்தார். நம்பியாரூரர் பால் நீங்காத கோபமும் பகையும் எழுந்தது. ஆளுடைப் பரமர் தம்மை இரவினில் தூது போக ஏவி அங்கிருந்தான் தன்னை, வரவெதிர் காண்பேனுகில் வருவதென்னுங்கொல் என்று விரவிய செற்றம் பற்றி விள்ளும் உள்ளத்தராகிக் காலம் பார்த்திருந்தார் கலிக்காமர்.

ஏயர்குரிசிலாரின் எண்ணமறிந்த இறைவன் இருவருக்கு மிடையாய ஓர் நட்புப்பாலத்தை அமைக்க எண்ணினர். வாடுறு சூலை தந்து வாகீசப் பெருந்தகையை ஆண்டுகொண்டது போல, இந்த அடியார் பாலும் அனல்செயும் சூலையைக் கொடுத்தருளினர். குடரோடு துடக்கி முடக்கியிடும் கொடுஞ்சூலையைத் தவிர்த்தருளும் என்று கூறி வணங்கிய ஏயர்கோன் செவியில் 'வன்தொண்டனலன்றி மற்றவர்களால் இந்தச் சூலை மாயாது' என்ற வானொலி விழுந்தது. பெருமானுடைய திருவாக்கைச் செவிமடுத்தவர் தம்முன்னே தாமொரு முடிவு செய்து கொண்டார். நுதல்விழி நாட்டத்திறைவன் சுந்தரர் கனவில் சென்று சூலை தீர்த்து வைப்பான் வேண்டி திருப்பெருமங்கலம் செல்க! என்று பணித்தார். அண்ணலின் அருளிப்பாடு பெற்ற பின் தாம் வருந்திறத்தை முன்பாகச் சொல்லி விட்டு திருப்பெருமங்கலத்திற்கு எழுந்தருளினர்.

வன்தொண்டர் வரவறிந்த ஏயர்கோன் வருந்தினர். இறைவனாலே தீர்க்க முடியாத இச்சூலையை வன்தொண்டர் தீர்க்க தாம் இசைவதா! என்னே ஆண்டவன்சோதனை! என்று கலங்கியவர் தம் உடை வாளினால் உயிரையே போக்கிக்கொண்டு விட்டார்.

'மற்றவன் இங்கு வந்து
தீர்ப்பதன் முன் நான் மாயப்
பற்றிநின் றென்னை நீங்காப்
பாதகச் சூலை தன்னை
உற்ற இவ் வயிற்றி னோடுங்
கிழிப்பன்என் றுடைவாள் தன்னால்
செற்றிட உயிரி னோடும்
சூலையும் தீர்ந்த தன்றே'

கணவனுயிர் தேடற்பொருட்டு தம்முயிரையும் நீக்கக் கருதிய தேவியாரின் செயலும் வியப்புக்குரியதே!

போர்க்களத்திலே வீரன் ஒருவன் வேலின் வாயிலே பட்டான். அவனுடைய மனைவி களம் நோக்கி ஓடி வந்து தன்னுயிரையும் அவனுயிருடன் சேர்த்தாள். இதனை ஆஞ்சிக் காஞ்சி (அஞ்சின காஞ்சி என்ற பொருளிலே) என்று வழங்குவர்.

"மன்னுயிர் நீத்த வேலின் மனையோள்
இன்னுயிர் நீப்பினும் அத்துறையாகும்"

"கவ்வைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன் - அவ்வேலே
அம்பிற் பிறழும் தடங்கண் அவன்காதல்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று.

இன்னொருத்தி தலைவனின் உடலைத் தரைமகள் தாங்குவதன் முன்னம் தாங்கி, விண்ணாட்டு அரமகளிர் அவனைத் தழுவு வதற்கு முன்பு தன்னுயிரையும் விடுத்து வானுலகத்தில் அவனை எதிர்கொண்டாள்.

" தரைமகள்தன் கொழுநன்தன் னுடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலாற் றாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின்."

கலி - பரணி

கலிக்காமரின் துணைவியாரும் இவ்வகையில்தான் தன்னுயிரை போக்க எண்ணினர். அந்தச் சமயம் ஆலாலசுந்தரர் வந்தணைந்தார் என்ற ஒலி எழவே - தமது செயலை நிறுத்திவிட்டுப் புணர்நிலை வாயிலிலே பூர்ண கும்பம் தீபம் வைத்துத் துணர் மலர் மாலை தூக்கித் தொழுது எதிர் கொள்ளச் சென்றார், மெய்மையான விருப்பினோடும், முகமலர்ச்சியோடும் எழுந்தருளிய ஆளுடைய நம்பிகள் சூலையால் வாடும் ஏயர்கோனைக் காணாது அவர் எங்குற்றார் என வினவினர். மாதர்தம் ஏவலாலே மனைத் தொழில் மாக்கள் அவர் உள்ளே பள்ளி கொள்கிறார் — தீது ஏதும் நிகழவில்லை என்று நினைவோடுரை செய்தார்கள். அதனை அப்படியே நம்பாதவர் ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது என்ற உள்ளுணர்ச்சியால் கலிக்காமரைக் காண வேண்டும் என்று கூற, மற்றவர்கள் வேறு வகையின்றி உயிரற்ற உடலைக் காட்டினார்கள். கண்ட சுந்தரர் துணுக்குற்று இதுவும் இறைவன் திருவிளையாட்டே என்று தமதுயிரையும் போக்குவதற்காக உடை வாளை உருவி ஓங்க - இறைவனருளால் உயிர் பெற்றெழுந்த ஏயர்கோன் தனது கைகளினால் அவரது கைகளைப் பற்றியபடி 'கேளிரே யாகிக் கெட்டேன்' என்று புலம்பி அவரை நெஞ்சாரத் தழுவிக் கொண்டார்.

மன வேற்றுமை நீங்கிய குகன் பரதனைப் போற்றித் தழுவிக் கொண்டதைத்தான் இதுவும் நினைவு படுத்துகிறது. கவிச் சக்ரவர்த்தி இக்காட்சியை அழியாத சொல் ஓவியமாகத் தீட்டி யுள்ளார்.

"வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தலைவணங்கும் அவனும் அவனடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர்கோனின் திருவடிகளை வணங்க ஏயர்கோனும் நம்பிகளின் குரைகழலைப் பணிந்து போற்றினர், பூவுலகோர் மனம் மகிழ்ந்து வாழ்த்தினர்கள். மனத்திலே கொண்ட பகைமை நீங்கவே நீங்காத நட்புணர்ச்சி இருவர் மனத்திலும் நிறைந்தது.

ஏயர்கோன் - சுந்தரர் இருவரது வீரச் செயல்கள் எண்ண எண்ண இன்பம் தரும். வீரத்தை வழிபட்ட வரலாறுடையார் வரிசையிலே தகுந்த இடங் கொண்ட தகைமையாளர்களே இருவரும். இவர்களது தன்மைக்குகந்த செந்தமிழ்ப் பாடல் ஒன்று கம்பரின் காவியத்திலே காட்சியளிக்கிறது.

"வென்றிலென் என்ற போதும் வேதமுள் ளளவும் யானும்
நின்றுளென் அன்றோ மற்றவ் இராமன்பேர் நிற்குமாயின்
பொன்றுதல் ஒரு காலத்துத் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வர் புகழுக்கும் இறுதி யுண்டோ !"

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

I am very glad to testify the way in which this temple is maintained. The temple is kept very clean - the prerequisite for Bakthimarga Dharmapuram Adhinam is taking great interest in maintaining the traditions of this temple.

(Sd.) N. S. Sundaram,
Examiner of L. F. Accounts.
7—4—65.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்

கயிலைக் குருமணி

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாரூர் இராஜன் கட்டளைக்குச் சொந்தமான
கடாரங்கொண்டான்

ஸ்ரீ சுந்தர பார்வதியம்பாள் சமேத ஸ்ரீ கயிலாசநாதர்

ஆலயத்தைப் புதுப்பித்து, 7—4—65 புதவாரத்தன்று

மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியமைக்கு

அன்புடன் வாசித்தளித்த

# பாராட்டு வாழ்த்துரை

---

தருமையம் பதியில் தகவுடன் அமர்ந்து
அருமையின் அறம்புரி அன்புடைக் குருவே!

மக்கட் பிறவி உய்தி பெறுவது குருவின் திருவருளால்தான். குரு தரிசனம் எளிமையில் கிடைப்பதன்று. "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது தாயுமானவர் வாக்கு. இத்தகைய அருமைப்பாட்டினை யுடைய குருவருள் தங்களது எளிவந்த கருணையினால் எளிதில் எமக்குக் கிடைப்பதற்குத் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமணியாய்க் குலவிடும் தங்கள் பெருமையினை எவ்வாறு எடுத்துரைப்பது! தங்களது அருளாட்சியில் தெய்வ ஒளி தென்னகம் முழுதும் பரவுவது அளவிலா மகிழ்ச்சியை அளிக்கின்றது.

ஆலயப் பணியினை அரன் பணியாக்கோள்

சீலமிக்குடைய தேசிக ராய !

ஆலயத்தை அரன் எனவே கருத வேண்டுமென்பது ஆன்றோர் துணிவு. தங்களது அருளாட்சியில் உள்ள ஆலயங்கள் எல்லாம் புதுப்பிக்கப் பெற்று கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப் பெறுவதால் தெய்வ சாந்நித்தியம் பெற்று அங்கங்கே வழிபடும் அடியவர்களுக்குத் தெய்வத் திருவருளை வாரி வழங்குகின்றன. கி. பி. பதினொன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த இராஜேந்திர சோழன் கடாரத்தில் கொண்ட வெற்றிக்குச் சின்னமாய்ச் சிற்பத்தின் சிகரமாய்த் திகழ்வது கடாரங்கொண்டான் கயிலாசநாதர் ஆலயம். இவ்வாலயத்தினைச் சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் புதுப்பித்துக் குடமுழுக்கினையும் நிகழ்த்தி இப்பக்கத்தில் உள்ளார் அனைவருக்கும் பக்தி நெறியை ஊட்டும் தங்களது பெருமை எழுத ஏட்டிலடங்குவதன்று. தங்களது சிவப்பணியை என்றென்றும் மக்கட் சமுதாயம் எண்ணி இன்புற்றுப் பாராட்டுவது உறுதி.

பக்தி வலையதில் பரமனைப் பகுத்திடும்

வித்தகம் மிக்க விமலநற் குருவே !

மனிதனை மிருக நிலையிலிருந்து மாற்றுவது கடவுள் நெறியே. கடவுள் நெறி பக்தி மார்க்கத்தால்தான் விளக்கம் பெறுகிறது. பக்தி பண்ணுவார் - பக்தர் எனப்படுவார். இவர்களது பெருமை "பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்ற சுந்தரர் செந்தமிழால் நன்கு விளங்குகிறது. தங்களது அரிய சாதனைகளால் இந்தப் பக்தர் கூட்டம் பாரெங்கும் பரவுகிறது. இதனால் பகை, பொறாமை, வெறுப்பு முதலிய தீய சக்திகள் மெலிந்து, அன்பு, அருள், ஈகை முதலிய நல்ல சக்திகள் வளர்ச்சி அடைகின்றன. இப்படிப்பட்ட பக்தி நெறியினை வளர்த்துவரும் தாங்கள் விரைவில் வெள்ளி விழாக் காணும் நிலையில் உள்ளமை கருதி அடியவர் கூட்டம் அளவிலா மகிழ்வெய்துகின்றது. வளர்க தங்கள் அருள்நெறி ! வாழ்க தருமையாதீனம் !! வாழ்க கயிலைக் குருமணி !!!

இன்னணம்,

திருவாரூர், 7—4—65. } திருவாரூர் - விஜயபுரம் அன்பர்கள்.

# மண்ணுங் கட்டி நேருஞ்சோ!

உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துவது சொல். சில வேளைகளில் நம் உணர்ச்சியை நாம் விரும்பும் அளவிற்கு வெளிப்படுத்துவதற்குரிய சொல் கிடையாமையால், இடர்ப்படுகிறோம். ஒரு பொருளுக்குப் பலப் பல அடைமொழிகளைத் தொகுத்து, நீண்ட தொடர் மொழியாகக் கூறுவது, இவ்விடர்ப்பாட்டினாலேயாம். 'மாபெருங் கூட்டம், வெங்கொடும் போர்' என்பன போலச் சொல்லப்படும் ஒரு பொருட் பன்மொழிகளும் இந்நிலையின என்று கூறுவதும் உண்டு.

ஞானசம்பந்தர், அஞ்செழுத்தை அன்புடன் ஓதவேண்டும் என்பதை ஒரு சொல்லாற் சொல்லாமல்,

"காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"

என்று அருளுவதைக் காண்கிறோம். நாவுக்கரசரும், இறைவன் தம்மிடத்தில் பேரருளாளனாய் நின்று பெரிதும் நலம் புரிந்து வரும் சிறப்பினை,

"........என் உறவே! என் ஊனே! ஊனின்
உள்ளமே! உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவே! என் கற்பகமே கண்ணே! கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய்!"

என்று அருளிச்செய்கின்றார்.

"ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய
தோழனுமாய், யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி"

என்பது, சுந்தரர் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் தொடர்,

"நெல்லிக் கனியைத், தேனைப் பாலை,
நிறைஇன் னமுதை, அமுதின் சுவையை"

என்னும் இத்துணைச் சொற்களும் திருவாசகத்தில், 'இறைவன்' என்ற ஒரு பொருளைக் குறிப்பதற்கு வந்துள்ளன. இவையெல்லாம் அவற்றை அருளிச் செய்தவர்கள் தமது உணர்ச்சிப் பெருக்கினை வெளியிட நினைந்த உள்ளத்தினுல் அமைந்தவையேயாம்.

" சாக்கியப் பட்டும் சமணுருவாகி உடைஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போமுகம் பற்றும் விட்டார் "

என்பதில், 'பாக்கியம்' என்றதுபோல, அருகி வழங்கும் பிறமொழிச் சொற்களை ஆளுவதும், உணர்ச்சியை இனிது விளக்கும் பான்மையிலேயாம். இவ்வகையில் குமரகுருபர அடிகள் திசைச் சொல் ஒன்றைத் தமது பாடலில் முதல்முதலாகத் தாமே புகுத்தியிருத்தல் யாவரும் அறிந்தது.

'முருகப் பெருமான், வள்ளிநாயகியார் மீதுள்ள காதலால் அவ்வம்மையாருக்குப் பணிவிடை புரிந்து ஒழுகுகின்ருர்'எனச் சுவைபடக் கூறுதல், அருளாளர்களது திருப்பாடலில் நன்கு காணப்படுவதேயாம். அதனை,

" பணியா'என வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே "

என்று அருணகிரிநாதர் அருளுகின்ருர். முருகப் பெருமான் வள்ளிநாயகியாரிடம் காட்டும் பணிவின் மிகுதியை, இன்னும் சுவைபடக் காட்டக் கருதிக் குமரகுருபரர்,

" குறவர் மகட்குச் சலாம் இடற்கு ஏக்கறும் - குமரன் "

என்று அருளினர். மொகலாயரது சொல்லாகிய, 'சலாம்' என்னும் சொல்லை, அவர்களது ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த அடிகள், தமது தீந்தமிழ்ப் பாடலில் இடமறிந்து சேர்த்திருத்தல், இன்பம் விளக்கின்றது. 'குறவர்மகட்குக் கும்பிடு போடுபவன்' என்பதைவிட, 'சலாம் போடுபவன்' என்பது அச் சுவையை இன்னும் மிகுதிப்படுத்துவதாம். எனவே, இந்தச் சொல்லை வேறு இடத்தில் வைப்பின் சிறிதும் பொருத்தம் அற்றதாய்த் தோன்றும். ஆனல் இவ்விடத்திலோ, அது மிகவும் பொருத்தமாய்த் தோன்றுகின்றது. இவை போலவே, உணர்ச்சி மிகுதியை வெளிப்படுத்தக் கொச்சை வழக்கினையும் புலவர்கள் கையாளுதல் உண்டு. இதற்கு விதி, தொல்காப்பியத்திலும்

காணலாகும். இம்முறை தாயுமான அடிகள் பாடலில் பெரிதும் காணப்படுவதாம். அவைகளில் ஒன்ருக, அவர் தமது நெஞ்சை வெறுத்துப் பேசும் பேச்சில், 'இது என்ன மண்ணுங்கட்டி நேஞ்சோ' என்று கூறும் ஓர் அரிய ஆட்சியைக் காண்கின்ருேம், அவ்வரிய பாடல் இது:-

"தன்நெஞ்சம் நினைப்பொழியா தறிவிலிநான்
ஞானமெனும் தன்மை பேச,
உன்நெஞ்சம் மகிழ்ந்து ஒருசொல் உரைத்தனையே;
அதனைஉன்னி உருகேன் ஐயா !
வன்னெஞ்சோ ! இரங்காத மரநெஞ்சோ !
இருப்புநெஞ்சோ ! வயிர மான
கல்நெஞ்சோ ! அலது மண்ணுங்கட்டி நேஞ்சோ !
எனதுநெஞ்சம் கருதிற் ருனே."

'என் நெஞ்சம் உலகப் பொருள்களை மாறி மாறி நினைக்கின்ற நினைப்பை ஒழிவதில்லை; ஆயினும், அதுவும் சிறிது ஞானத்தை உணரும்படி, எம்பெருமானே, நீ எனக்கு மௌன குருவாகிய குருமூர்த்தியாய் வந்து ஒப்பற்ற ஒருசொல்லால் ஞானத்தை உணர்த்தினுய்; இந்த அருட்பெருக்கை நினைத்தால் என் நெஞ்சம் எப்படி உருகுதல் வேண்டும்! ஆனுல், அஃது ஒருசிறிதும் உருகவில்லையே; அதனுல், அது என்ன வலிமை பொருந்திய நெஞ்சோ! மரத்தினுல் செய்யப்பட்டதோ! இரும்பினுல் செய்யப்பட்டதோ! கல்லால் செய்யப்பட்டதோ' என்று சொல்லி இரங்குகின்ற அடிகள், உருகாத நெஞ்சை, 'மண்ணுங் கட்டி' என்று கூறியது, கல், இரும்பு இவைகளைவிட மண்ணுங்கட்டி வலிமையானது என்பதனுல் அன்று; எதற்கும் பயன்படாத ஒன்றை, 'மண்ணுங்கட்டி' என்று கூறும் உலக வழக்குப் பற்றியேயாம். 'மண்ணுங் கட்டி' என்பது, 'மண்ணங் கட்டி' என்பதன் மரூஉமொழியாம்.

தருமை ஆதீனத்து எட்டாவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைக் குறித்து, சொர்க்கபுர மடாலயத்தைத் தோற்றுவித்த ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கிளிவிடுதூதில் "என் உயிரினுக்குச் சோன்ஞன் ஒரு சோல்'' என்று குறிப்பிடுவதை இத் திருப்பாடலி

லும் தாயுமானவர் அருளியிருத்தலைக் காணலாம். "விண்மாரி எனஎன் இரு கண்மாரி பெய்யவே-வேசற் றயர்ந்தேனியான்" என்கின்ற அடிகளே தம் மனத்தை, 'இரும்பு மனம், கல் மனம்' என்று கூறுதல், அஃது, இன்னும் பெரிய அளவில் உருக வில்லையே என்னும் வருத்தத்தினலாம்.

"வெள்ள ந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ள ந்தா ழுறுபுன லிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ள ந்தாள் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால்; உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ள ந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்லாம்;
கண்ணிணையும் மரமாம்; தீவினையி னேற்கே"

என்பது முதலிய திருவாசகத் திருப்பாடல்களை இதனோடு நோக்கி, உணர்க. திருவருள் பெற்ற சிவானுபூதிச் செல்வர்களது இத்தகைய உணர்ச்சி மிக்கதிருப்பாடல்களை ஓதியுணரின், நமது கன்மனமும் நன்மனமாய்க் கரைந்துருகும் பேற்றினைப் பெறலாகும்.

---

வரப்பெற்றோம்

## துரியவெளி

சிதம்பரந் தாலூகா பின்னலூர், திரு. துரியானந்தர் இந் நூலின் ஆசிரியராவார். நூறு பக்கங்கள். விலை ரூ. 1—50. கிடைக்குமிடம் :- P. R. சிவானந்தம் அவர்கள். ஞானம் பதிப்பகம், 1. இராமானுஜம் செட்டித்தெரு, சென்னை - 34. மக்கள் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் உண்மைப் பொருளைக் காண விரும்பும் அன்பர்களுக்கு அதனை விளக்கிக் காட்டப் பெரிதும் பயன் அளிப்பதோர் சிறந்த நூல்.

தருமை ஆதீனம்

## ஸ்ரீ வேளூர் தேவஸ்தானம்

# இலவச சித்த வைத்தியசாலை

## ஆண்டறிக்கை

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகாசந்நிதானம் அவர்களின் அருள் ஆணையின்வண்ணம் இந்துமத அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களின் தலைமையில் அறநிலையத்துறை அமைச்சர், கனம். எம். பக்தவத்சலம் அவர்கள் ஸ்ரீ வேளூர் தேவஸ்தான இலவச சித்த வைத்தியசாலையை 13—11—61ல் முறைப்படி துவக்கிவைத்தார்கள்.

மூன்றுண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. வைத்தியசாலை படிப் படியாக வளர்ச்சியடைந்து இன்று பல பக்கங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதன் புகழைக் கேள்விப்பட்டு, பலவகைப்பட்ட நோயாளிகள் வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்ள வந்து, நற்பயனை அடைந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவர்களில் ஆங்கில வைத்தியத்திற்கும், மற்றும்பல வைத் தியத்திற்கும் கட்டுப்படாத நோய்வாய்ப்பட்டவர்கள் சுமார் 10000-திற்கும் அதிகமானவர்களாவர். அவர்களில் சுமார் 75 சத விகிதத்தினர் பூரண குணமடைந்திருக்கிறார்கள். அதற்கு அத்தாட்சியாக அவர்களால் வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களில் சிலவற்றின் நகல்களை இதனடியில் குறிப்பிட்டு இருக்கின்றோம்.

### சித்தவைத்தியமும் அதன் தோற்றமும் :-

மேல்நாடுகளின் ரஸ, ரஸாயன, பௌதிக சாஸ்திரங்களின் (Chemistary and Physics etc.) உற்பத்தியைப்பற்றி ஆராயுங் கால் ஈயம், தாமிரம் போன்ற மட்ட உலோகங்களைத் தங்க மாக்கி அதனால் பெரும்பொருள் ஈட்ட அரும்பாடுபட்டுக் கண்டு பிடிக்கப்பட்ட தாதுவாதம் (Alchemy) என்ற கலையே பிற்காலத் தில் ரஸவாதமாகப் பரவியது. ரஸவாத மருந்துகளால் தீராத

வியாதிகளையும் குணப்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப்பட்ட முடிவே, நம்நாளில் ரஸாயனம் (Chemistry) பௌதிகம் (Physics) போன்ற மூல விஞ்ஞானங்களின் உற்பத்திக்கு காரணமாகியது. இத்துறையில் கிரேக்க விஞ்ஞானிகள் பெரிதும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்பதை சரித்திரத்தால் அறியலாம்.

நம் பாரத தேசத்தில் இத்துறையில் நம் பெரியோர்களின் மனம் சென்றதற்கு ரஸவாதத்தைக் காட்டிலும் வேறொரு அரிய லக்ஷ்யம் இருக்கின்றது என்பதை அவர்களின் நூல்களிலிருந்து அறியலாம். இந்த லக்ஷியத்தைப்பற்றியுள்ள நூல்களையே 'ரஸேசுவர்தர்கள்' எனவும், 'சித்தர் முறை' எனவும் கூறுகின்றார்கள்.

நம் தென்னாட்டில் உள்ள ரஸ விஞ்ஞானங்களும் சாஸ்திரங்களும் தெய்வ நெறியையறிந்துணர்ந்து தெய்வ நிலையை எய்துவதன் பொருட்டுத் தேகத்தைச் சித்தமாக்குவதையே லக்ஷியமாகக் கொண்டார்கள். அதாவது நரை, திரை, அகன்று வெகுகாலங்கள் வாழக்கூடிய திடமான சரீரத்தைப் பெற்று யோகம், சரியை, கிரியை இவைகளால் மனதைச் சுத்தமாக்கியும் திடப்படுத்தியும் அமைந்த ஆன்மஞானத்தால் உயிருடனிருக்கும் பொழுதே சம்சார பந்தங்களைத் துறந்து முத்தியை அடைய விரும்புவதையே பெரும் பேறாக மதித்தார்கள்.

நம் சரீரத்திலுள்ள ஒவ்வோர் அணுவும் பிரதி நிமிடமும் உற்பவித்தும் அழிந்தும் போவதாலேயே இவ்வுடலுக்குச் சரீரம் (அழியும் தன்மை உடையது) எனப் பெயர் வந்தது. மேற்கூறப்பட்ட ரஸவாதத்தால் சரீரத்திலுள்ள ஒவ்வோர் அணுவிலும் தேவையான ரஸம் ஊடுருவிப்பரவி, அதன் அழிவுத் தன்மையை அகற்றித் திடப்படுத்துவதாலேயே தேகம் பல்லாண்டுகள் நரை, திரை மூப்பு வராமல் வாழ்ந்திருக்க முடியும் என்பதை நம் சித்தர்கள் அறிந்திருந்தார்கள்.

தேகத்தில் ஓர் அங்கமோ அல்லது பகுதியோ திடப்பட்டு, மற்றோர் அங்கம் அல்லது பகுதி திடப்படாவிடில் இச்சரீரம் அழிந்துவிடும். ஆகையால் சரீரத்தில் இந்த ரஸாயன முறைகளை எவ்வகையில் சேர்த்தாலும் அவை வெகு எளிதிலும் அதி சீக்கிரமாகவும் ஒவ்வோர் அணுவிலும் ஊடுருவிப் பாய்ந்து, பரவி அதன் இயற்கையான அழிவுத்தன்மையை மாற்ற வல்லது என்பதைக் கண்டறிந்தார்கள்.

எனவே இவ்விதம் பூர்த்தியடைந்த ரஸாயனத்தைப் பரீக்ஷிக்கவே ஈயம், தாமிரம், போன்ற மட்ட உலோகங்களின் ஒவ்வோர் அணுவிலும் ரஸம் ஊடுருவிப் பாய்ந்து அதன் அழிவுத்தன்மையை மாற்றித் தங்கம்போன்ற அழியாத உயர்ந்த உலோகங்களாக மாற்ற முடியும் என்பதைக் கண்டறிந்தார்கள்.

இவ்வாறு உலோகங்களின் தன்மை மாறினால் அம்முறையே தேகத்தின் அழிவுத் தன்மையையும் மாற்றவல்லது என்பதைப் பரீக்ஷை முறையில் நிச்சயித்தார்கள்.

இவ்விதம் ரஸசித்தாந்தங்களைக் கண்டறிந்தவர்களைக் கண்டறிந்தவர்கள் சித்தர்கள் ஆனதாலும், தம் தேகத்தைச் சித்த மயமாக்குவதையே லக்ஷியமாகக் கொண்டதாலும், இம்முறை நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் பயன்பட்டதாலும் இம்முறை 'சித்தர் முறை' என்றும், 'சித்த வைத்தியம்' என்றும் பெயர் பெற்றது.

இவ்வாறு ஏற்பட்ட வைத்தியத்தை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அதாவது 1. தேவ வைத்தியம். இது மந்திரம் போன்ற பரிகாரங்களால் நோய் தீர்ப்பது 2. மானுட வைத்தியம், இது பச்சிலை மூலிகைகள் கம்பச் சரக்குகள், ரசச் சரக்குகள் உலோகங்கள் ஆகியவற்றால் ஔடதங்கள் செய்துகொடுத்து பிணி தீர்ப்பது. 3. அசுர வைத்தியம், இது, அறுத்தல், தைத்தல் குத்துதல் போன்ற சாஸ்திர சிகிச்சைகளால் நோயை அகற்றுவது. (தற்சமயம் ஆங்கில வைத்தியத்தில் கையாளப் படுகின்றது) மானசீக வைத்தியம். அதாவது மகான்கள் பக்தர்கள் தம் திருஷ்டி நோக்கினாலேயே வியாதியைக் குணப்படுத்துதல் (அப்பர், சுந்தரர் போன்ற மகான்களால்தான் இதைச் செய்யமுடியும்)

இங்கு மானுட வைத்தியத்தில் கூறியுள்ளபடி திரிதோஷ நாடி (வாதம், பித்தம், சிலேத்துமம்) பரீக்ஷையைக் கொண்டு வியாதிகளைக் கணக்கிட்டு வைத்தியம் செய்யப்படுகின்றது.

" தாது முறையேதனி யிடை வாதமாம்
போதுறு பிங்கலை புகன்றது பித்தமாம்
மாது சுழிமுனை வழங்கிடு மையமாம்
ஓதுமுறை பார்த்து உணர்ந்தவர் சித்தரே "

— திருமூலர்.

நாழிகையொன்றுக்கு 360ம் நாளொன்றுக்கு 21600ம் ஆக நிகழும் சுவாசங்களே கலாசமும் கரேரசக. பூரகமும்பமாய் இடை கலை பிங்கலை, சுழுமுனையாகிய மூன்று நாடிகளால் வாத, பித்த, சிலேத்துமம் ஆகின்றன. அவைகள் தமக்கு உள்ள அளவில் ஓடிக்கொண்டிருந்தால், எவ்வித பிணியும் அணுகாமல், நோயற்ற வாழ்வு வாழமுடியும்.

இங்கு வரும் நோயாளிகளை மூன்று பிரிவுகளாக, அதாவது சாத்தியம், அசாத்தியம், அதிகாரம் என்று பிரித்து வைத்தியம் செய்யப்படுகின்றது. சாத்தியமான வியாதிகளுக்குக் குழந்தைகள் ஒரு மாத முதல் ஒரு வயது வரையில் பச்சிலை மூலிகைகளாலும் மாத்திரைகளாலும், ஒரு வயது முதல் ஐந்து வயது வரை கியாழங்கள், தைலங்கள், மாத்திரைகள், சூரணங்களாலும் 5 முதல் 21 வயது வரை லேகியங்கள், கிரதங்கள், சூரணங்கள். செந்தூரங்கள், பஸ்பங்களாலும் 21 முதல் 50க்கு மேலும் உலோகங்கள், பாஷாணங்களால் செய்யப்பட்ட பஸ்பம், செந்தூரம் ரசாயனம், தைலம், வடகம், போன்ற மருந்துகளால் வியாதிகளுக்குத் தக்கபடி கண்டறிந்து வைத்தியம் செய்யப்படுகின்றது.

இங்குக் கையாளப்படும் சகல மருந்துகளும் நம் வைத்திய சாலையிலேயே உயர்ந்த முறையில் செய் பாகங்கள் கெடாமல் நன்கு அறிந்த வைத்தியர்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப் படுகின்றன.

சித்த வைத்தியம் மற்ற வைத்திய முறைகளைக் காட்டிலும் மிகக் குறைந்த செலவில் ஆரம்பகால வியாதிகளைப் போக்கலாம். மற்ற வைத்தியங்களைக் காட்டிலும் சிறந்தது. நீடித்த நிவாரணம் அளிக்கக் கூடியது. தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம் போன்ற திருமறைகளிலும், சித்த வைத்தியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைக்கண்டறிந்து செய்தால் முப்பு போன்ற மருந்துகளை முடிக்கலாம்.

அசாத்தியமான வியாதிகள் அதாவது மற்ற வைத்தியங்களுக்குக் கட்டுப்படாத காசம், குஷ்டம், புற்று நோய், உப்புநீர், ரோகம், முடக்கு, பிடிப்பு போன்ற வாத சம்பந்தமான ரோகம், க்ஷயரோகம் போன்ற கொடிய வியாதிகளுக்குச் சித்த வைத்தியத்தில் கூறப்படும் மிக உயர்ந்த மருந்துகள் தயாரித்துக் கொடுத்தால் 100 க்கு 75 சதவிகிதம் நிவர்த்திக்கலாம். நிவாரணம் அளிக்கக் கூடிய மருந்துகள் சித்த வைத்தியத்தில் இருக்கின்றன.

அதிசார ரோகங்களைப் பச்கிலை மூலிகைகளாலும் உயர்ந்த தாது வர்க்கங்களைக் கொண்டும் நோயாளிகளை வைத்தியர் அருகிலேயே வைத்து வைத்தியம் செய்வதற்கும் வசதிகள் (Impatient ward) செய்யத் திட்டமிட்டிருக்கின்றோம்.

எங்கள் வைத்தியசாலைக்குத் தேவைப்படும் மிக முக்கியமான மூலிகைகள் யாவும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களால் வழங்கப்பட்ட 30 ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் (அதாவது 5 ஏக்கரில்) மட்டும்-பரீக்ஷார்த்தமாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ எல்லா மூலிகைகளையும் எங்கள் உபயோகத்திற்குத் தகுந்தாற்போல் இங்கேயே பயிரிட ஏற்பாடாகி இருக்கிறது.

ஆலயங்கள் அமைக்கப்பட்ட காலமுதல் ஆலயங்களுக்கு அருகாமையிலேயே நந்தவனங்களை அமைத்து அங்கு வைத்தியத்திற்குத் தேவைப்படும் புஷ்பச்செடிகளையும் மூலிகைகளையும் வைத்து வளர்த்து. அந்தப் புஷ்பங்களையும் பச்சிலைகளையும் ஆண்டவனுக்கு அர்ச்சிக்கவும், அலங்கரிக்கவும் உபயோகித்து வந்தார்கள். நம் ஆலயங்களுக்கு உபயோகப்படும் பச்சிலைகளும் ஸ்தல விருக்ஷங்களும் பல வியாதிகளையும் போக்கவல்லன. உதாரணமாக.

வில்வம் :-

வாதகுன்மம், வாயு, கவம், பித்தசோகை, அக்கினிமாந்தம் அதிசாரம், விக்கல், பித்தசுரம், இவைகள் நீங்கி, தேகத்தின் அழகையும், புஷ்டியையும் அதிகப்படுத்தும், திரி தோஷத்தையும் சமன்செய்யும்.

வேம்பு :-

சீதசுரம், மூலகணம், மாந்தம், குன்மம். வாதம், எரிப்பூச்சி இவைகளைப் போக்கும். பித்தகங்களைக் குறைக்கும். கிருமிகளை நாசம் செய்யும் குணமுடையது.

துளசி :-

கவம், அஸ்திசுரம், வயிற்றுளைச்சல், தாகம், சுரமாந்தம், அரோசகம், இவைகளைப்போக்கும். வெப்பத்தை தரும். இருமல், இரைப்பு, கோழை, மார்ச்சளி ஜன்னிபாத சுரம், இவைகளை நீக்கும்.

சிவகரந்தை :

வாந்தி, அரோசகம், விந்து நட்டம், கரப்பான், காசம், வாதம், அக்கினிமாந்தம் இவைகளை நீக்கும். ஜாடராக்கினி

யையும். வனப்பையுமுண்டாக்கும். தாதுபுஷ்டிதரும். வாத நீக்கி, பித்தத்தை அதிகப்படுத்தும்.

முல்லை :

நேத்திரப் பிரகாசம், மூர்ச்சை நீக்கும். வாந்திக்கு முல்லைப் புஷ்பகஷாயம் மிகச்சிறந்தது. பித்தசுரத்தைப் போக்கும்.

இவ்வாறு நமக்கு உபயோகப்படும் பல மூலிகைகள் ஆண்டவனுக்கு அர்ச்சனைப் பத்திரங்களாகப் பலகாலமாக உபயோகப் படுத்தப்பட்டு வந்து இருக்கின்றன. இவ்வாறு ஏற்படுத்தப் பட்ட நந்தவனங்களின் தாத்பரியங்கள் காலக்கிரமத்தில் ஆங்கில வைத்தியம் வளர்ச்சி அடைந்த பிறகு மறக்கப்பட்டு, மூலிகை உபயோகங்கள் புறக்கணிக்கப்பட்டன.

இங்கு நம் மூலிகைத்தோட்டத்தில் பல எளிதில் கிடைக்காத மூலிகைகளையும் வளர்க்கத் திட்டமிட்டு இருக்கின்றோம். பொது ஜனங்களுக்கும், நோயாளிகளுக்கும் நல்ல முறையில் பயன் படும்படி பூங்கா அமைப்பில் நடைபாதைகள் அமைத்து இருக் கின்றோம். ஒவ்வொரு மூலிகைகளின் பெயரும் அதன் உபயோக மும் எழுதப்பட்ட விளம்பரப் பலகைகளை ஆங்காங்கு அமைத்து மூலிகையின் உபயோகத்தை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள லும் படிசெய்து இருக்கின்றோம்.

இங்கு மேலும் சித்தவைத்தியத்தைப் பரப்புவதற்காகப் பல இளைஞர்களுக்கும் சித்த வைத்தியத்தில் பயிற்சி அளிக்கச் சித்த வைத்தியக்கல்லூரி ஒன்றும், மருந்து ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் எல்லா மருந்துகளையும் இங்கே தயாரித்து மற்ற மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகள் வழங்கும்படியான மருந் துகள் தயாரிக்கும் சாலை ஒன்றும் அமைக்கவும் திட்டமிட்டு இருக் கின்றோம். இது எங்கள் எல்லாத் தேவஸ்தானங்களுக்கும் கேந்திரமாக இருந்துகொண்டு ஒவ்வொரு தேவஸ்தானங்களி லும் ஒரு சித்த வைத்தியசாலை அமைத்துப் பொதுமக்களுக்குச் சேவை செய்யும்படி எங்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் ஆக்ஞையிட்டிருக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித் துக் கொள்கின்றோம்.

நமஸ்காரம்,

க. இராமகிருஷ்ணன்,

சித்தவைத்தியம்.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 24, இதழ் 4, பக்கம் 224 இன் தொடர்ச்சி )

नैवेद्य गन्ध पुष्पं च धूपदीप समन्वितम् ।
अष्ट द्रव्याणि संपूज्य चाष्टविद्येश्वरान्क्रमात् ॥ 502

पञ्चद्रव्ये पञ्चमूर्त्तिं तृद्रव्ये च तृमूर्त्तिकान् ।
एतानि तत्तन्मूलेन द्रव्याण्यपि च पूजयेत् ॥ 503

புண்யாவாசனம் செய்து ப்ரோக்ஷித்து சுத்தம் செய்யப்பட்ட அந்தத் திரவியங்களுக்குச் சந்தனம், புஷ்பம் சாத்தி, தூப தீபம் கொடுத்து, அந்த அஷ்டத் திரவியங்களிலும் அநந்தன், சூக்ஷ்மன், சிவோத்தமன், ஏகநேத்ரன், ஏகருத்ரன், திருமூர்த்தி, ஸ்ரீ கண்டன், சிகண்டி என்ற எட்டு வித்யேஸ்வரர்களையும் பூஜிக்கவேண்டும். ( அஷ்டத் திரவியமாவது :— பூங்காவி, சுக்கான்கல்பொடி, செம்பஞ்சு, கொம்பரக்கு, தேன் மெழுகு, உலாந்தாலிங்கம். கருங்குங்கலியம், எருமை வெண்ணெய் என்பன.

கொம்பரக்கு, சுக்கான்கற்பொடி, வெண்ணெய், குங்குலியம், தேன் மெழுகு என்ற ஐந்துத் திரவியங்களாலான பந்தனமாயின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து மூர்த்திகளையும், சுக்கான், குங்குலியம், வெண்ணெய் என்ற மூன்று திரவியங்களாலான பந்தனமாயின் பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மும் மூர்த்திகளையும் பூஜிக்கவேண்டும். அதாவது, அந்தந்தத் திரவியங்களில் அந்தந்த தேவதா மூல மந்திரத்தினல் பூஜை செய்யவேண்டும்.

अर्चयित्वा यथोक्तेन कल्पिते स्थण्डिलान्यके ।
लूखलं मुसलं स्थाप्य प्रोक्षये च्छुद्धवारिणा ॥ 504

षडुद्धासन मभ्यर्च्य तस्योपरि निधापयेत् ।
लूखलं बृह्मदैवत्यं मुसलं विष्णुदैवतम् ॥ 505

இவ்வாறு முறைப்படி பூஜை செய்து, வேறு ஒரு இடத்தில் கல்பிக்கப்பட்ட ஸ்தண்டிலத்தில் உரல் உலக்கையை வைத்து புரோக்ஷித்து, உரலை பிரமதேவதாஸ்வரூபமாகவும், உலக்கையை விஷ்ணுதேவதாஸ்வரூபமாகவும் தியானித்து, ஷடுத்தாஸனம் பூஜை செய்யவேண்டும் (ஷடுத்தாஸனம் என்பது அநந்தாய நம:, தருமாய நம:, ஞானாய நம:, வைராக்யாய நம: ஐச்வர்யாய நம:, பத்மாய நம: என்ற ஆறு அருச்சனையாகும்.)

वस्त्रै र्दर्भैरलंकुर्यादुलूखलं मुसलं ततः ।
गन्ध पुष्पैरलंकृत्य धूपदीपादिकं ददेत् ॥ 506

परिचार द्वय माहूय सोष्णीषं चोत्तरीयकम् ।
लूखस्य च मध्येतु तद्द्रव्यं निक्षिपेद्गुरुः ॥ 507

அந்த உரல் உலக்கை இரண்டிற்கும் வஸ்திரம், தர்ப்பம், சந்தனம், புஷ்பம் சாத்தி அலங்கரித்து, தூப தீபம் கொடுத்து உஷ்ணீஷம் உத்தரீயமுடையவர்களான இரண்டு பரிசாரகர்களை அழைத்து, உரலின் நடுவில் அந்த அஷ்டபந்தனத் திரவியங்களைப் போடவேண்டும்.

हस्ते गृहीत्वा मुसलं सुदृढं ताडयेत्पुनः ।
पुनस्संकुटय मुसलैस्सुपक्वं वीक्ष्य बुद्धिमान् ॥ 508

अग्नि बीज मनुस्मृत्वा लिङ्गात्पीठान्तरेक्षिपेत् ।
पूजांशं षोडशं कृत्वा चैकांशमष्टबन्धनम् ॥ 509

तन्मानं पदविस्तार मष्टबन्धं तु कारयेत् ।
यागशालां पुनर्गत्वा प्रायश्चित्तं हुनेत् क्रमात् ॥ 510

உலக்கையை கையால் எடுத்துக்கொண்டு முன்பு உரலில் போடப்பட்ட அஷ்டபந்தன மருந்தை வேகமாக இடிக்கவேண்டும். மாறிமாறி அடிக்கடி விடாமல் இடிப்பதால் பக்குவமாய்

இலிங்க பீடத்தில் சேர்க்கத் தகுதியுள்ளதாய் இருப்பதை அறிந்த ஆசாரியன் சிவலிங்கத்திடம் சென்று, அக்நிதேவதாமந்திரத்தை தியானித்துக்கொண்டு பூஜாபாகமான பாணத்தை பதினன்கு பங்கு செய்து, அதில் ஒரு பங்கு மறையும் அளவுக்கு அஷ்டபந்தன மருந்தை சாத்தி கெட்டி செய்யவேண்டும். எவ்வளவு உயரம் மருந்து சாத்தப்படுகிறதோ அவ்வளவு அகலமும் மருந்து இருக்கவேண்டும். அதாவது, லிங்கத்தின் பதிநான்கில் ஒரு பங்கு உயரம் மருந்து சாத்தவேண்டும் என்பதால் பீடத்தில் மருந்தின் அகலமும் அந்த உயரத்திற்குச் சமமாக இருக்க வேண்டும். இவ்வாறு அஷ்டபந்தனம் செய்து முடித்து யாக சாலைக்குச் சென்று ப்ராயச்சித்த ஹோமம் செய்யவேண்டும்.

शिल्पि स्पर्शादि दोषाय स्थापयेच्छान्ति कुंभकम ।
प्रज्वलच्छिव वह्नौ तु शान्ति मन्त्रं शतं हुनेत् ॥ 511

அஷ்டபந்தன மருந்து சாத்தப்படும் காலத்தில் ஏற்படும் சில்ப்பிஸ்பர்சம் முதலிய தோஷம் நீங்கும் பொருட்டு சாந்தி கும்பம் ஸ்தாபித்து ஜ்வலிக்கின்றதான சிவாக்னியில் பாசுபதாஸ்த்ரமந்திரத்தால் நூறு ஆவர்த்தி ஹோமம் செய்யவேண்டும். இலிங்கம் சுத்தி அடையவேண்டியதன் பொருட்டு அஷ்ட மிருத்துக்கள் சேர்ந்ததாயும், பஞ்சத்வக், பஞ்சபில்வம் சேர்ந்ததாயும் உள்ள தீர்த்தத்தினுல் அபிஷேகம் செய்யவேண்டும். ( அஷ்ட மிருத்திகையும் பர்சபில்வமும் பஞ்சத்வக்கும் இவ்வாறு கூறப்படுகிறது. )

दर्भमूलेतु वल्मीके पुण्यक्षेत्रेच कर्कटे ।
वृषश्रिंगे बिल्वमूले नद्यां वै गजदन्तके ॥ 512

संग्राह्याष्ट मृदोधीमान् भाण्डमेके निधापयेत् ।
अश्वत्थ मांम्रजंबूं च वटमौदुंबरं तथा ॥ 513

पञ्चत्वक् च समाख्यातं भाण्डेचैके निधापयेत् ।
पलाशो दुंबराश्वत्थ जंबूनां च वटस्य च ॥ 514

पञ्चपल्लव माख्यातं पात्रमध्ये विनिक्षिपेत् ।
बिल्वं कपित्थ निर्गुण्डी सरली वारणं तथा ॥ 515

पञ्चबिल्वं समाख्यातं पात्रमध्ये विनिक्षिपेत् ।
विधिवत्पञ्चगव्यं च स्थापये देशिकोत्तमः ॥ 516

அதாவது நாணலடிமண், புத்துமண், புண்ணியக்ஷேத்திர மண், காளைக்கொம்புமண், வில்வமரத்தடிமண், ஆற்றுமண், யானைத்தந்தமண், நண்டுவளைமண் என்ற இந்த எட்டுவகை மண்களையும் ஒரு புதிய பாண்டத்தில் போடவேண்டும். இவ்வாறு அரசம்பட்டை, மாம்பட்டை, நாவற்பட்டை, ஆலம்பட்டை, அத்திப்பட்டை இவைகளையும் அந்தப் பாண்டத்தில் போட வேண்டும். மற்றும், புரசம் கொழுந்து, அத்திக் கொழுந்து, அரசம் கொழுந்து, நாவற் கொழுந்து, ஆலங்கொழுந்து என்ற ஐந்து துளிர்களையும் அந்தப் பாத்திரத்தில் போடவேண்டும். வில்வம், விளா, நொச்சி, கிளுவை, மாவலிங்கு என்ற ஐந்து வில்வங்களையும் சேர்த்து தீர்த்தம் விட்டு வைத்துக்கொள்ள வேண்டும். முறைப்படி பஞ்சகவ்யம் ஸ்தாபித்துப் பூஜை செய்து கொண்டு, மிருத்து, த்வக், பல்லவ வில்வோதக கும்பத்தைப் பூஜிக்கவேண்டும். (இந்தக் கும்பத்தை ஐந்தாகவோ அல்லது ஒன்றாகவோ வைத்துப் பூஜிக்கலாம்.)

व्रिहींस्तदग्रे निक्षिप्य तिलतण्डुल संयुतान् ।
तत्कुम्भान् विन्यसेद्धीमान् सूत्रपल्लव संयुतान् ॥ 517

षडुद्धासनकं कृत्वा संहितां पूजयेत्क्रमात् ।
व्योम व्यापि जपेत्तत्र धूपदीपौ ददेत्गुरुः ॥ 518

சுவாமியின் முன்பு நெல், அரிசி என்ற இவைகளைப் போட்ட ஸ்தண்டிலத்தில் அந்தக் கும்பத்தை வைத்து மாவிலை, கூர்ச்சம் போட்டு ஷடுத்தாசனம் அர்ச்சித்து சம்ஹிதா மந்திரத்தினுல் பூஜித்து, வியோம வியாபி என்ற மந்திர ஜபம் செய்து தூப தீபம் கொடுக்கவேண்டும். பிறகு ரக்ஷாபந்தனம் செய்ய வேண்டும்.

(தொடரும்)

# செய்திகள்

## சென்னை மாநில ஆளுநர் அவர்களின் வருகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்கோயில்களுக்கு, சென்னை மாநில ஆளுநர், மேன்மை தங்கிய ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள் 21—4—65 அன்று வருகை புரிந்து வழிபட்டார்கள். ஆளுநர் அவர்களின் வருகையை முன்னிட்டு திருக்கோயில்கள் தோரணம் முதலிய வற்ருல் ஒப்பனை செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்கிற்று.

ஆளுநர் அவர்கள் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான் யேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், இரண்டாவது முறையாக வும், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு மூன்ருவது முறையாகவும் வருகை புரிந்தார்கள். திருக்கடவூரில் கட்டளைவிசாரணை, வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும், வேளூரில் கட்டளை விசாரணை, வித்து வான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், மாயூரம் - வள்ளலார்கோயிலில் சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர் களும், மற்றும் ஆதீன மேல் அதிகாரிகளும், தேவஸ்தான அலு வலர்களும் கனம் ஆளுநர் அவர்களைப் பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்து வழிபாடு செய்துவைத்தனர்.

திருக்கடவூரில் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி, ஸ்ரீ அபிராமியம்பாள் முதலிய மூர்த்திகளுக்கும், மாயூரம்-வள்ளலார்கோயிலில்ஸ்ரீமேதா தக்ஷிணமூர்த்திக்கும், வேளூரில் ஸ்ரீ தையல்நாயகி, ஸ்ரீ ஆறுமுகப் பெருமான் முதலிய மூர்த்திகளுக்கும் தங்கக் கவசமும், ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்கு நவரத்ந கவசமும் சாத்தப்பெற்றிருந் தன. கனம் ஆளுநர் அவர்கள் பக்திப் பரவசத்தோடு சந்நிதி களில் வழிபட்டு மகிழ்ந்தார்கள்.

## மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாரூர் இராஜாங்ககட்டளையைச்சேர்ந்தகடாரங்கொண்டான் ஸ்ரீ சுந்தரபார்வதியம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 7—4—65 அன்று மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. இக்கோயில், கலைச்சிறப்பின் நிலைக்களனாக இலங்கும் கோயில்களுள் ஒன்று. இத்திருக்கோயில் மதில் திருப்பணி, உலகப் புகழ்பெற்ற பழம்திருப்பணிகளுள் ஒன்று. மகாகயிலாய தரிசனம் செய்தவர்களும், மகாகும்பாபிஷேகங்கள் பலவற்றைச் செய்வித்தருளியவர்களுமாகிய தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மிகவும் பழுதடைந்திருந்த இக்கோயிலில் மதில்கள், முன்மண்டபம், சுவாமிகோயில் விமானம் முதலியவற்றைப் புதுப்பித்தும் அம்பாள் விமானம் புதிதாகநிர்மாணஞ்செய்தும், திருமாளிகைப்பத்தியைத் திருத்தியும், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கருங்கல் தளவரிசை செய்தும், இராஜகோபுரம் மூன்றுநிலை வைத்தும் பெரும்பொருட் செலவில் திருப்பணிகள்செய்வித்தும், குரோதிஆண்டு பங்குனித் திங்கள் 25ஆம் நாள் (7—4—65) புதன்கிழமை மிருகசீரிஷ நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் மகாகும்பாபிடேகத்தைச் சிறக்க நடத்துவித்தருளினார்கள். மகாகும்பாபிடேகத்தை முன்னிட்டு தரிசனத்திற்கு வரும் அன்பர்களுக்கு வசதியாக பந்தல்கள் தேவையான அளவு போடப்பட்டிருந்தன. யாகசாலை மண்டபம் நல்ல முறையில் அழகுறச் செய்யப்பட்டிருந்தது. 5—4—65 திங்கட்கிழமை இரவு யாகசாலை பூஜை தொடங்கி நான்குகால பூஜைகள் சிறந்த முறையில் செய்யப்பட்டன.

6—4—65 செவ்வாய்க்கிழமை அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்அவர்கள் எழுந்தருளி திருவாரூர் ஸ்ரீதியாகராஜசுவாமி திருக்கோயிலுக்குச் சென்று சுவாமி அம்பாள் தட்சிணாமூர்த்தி ஆகிய, மூர்த்திகளைத் தரிசனம் செய்து கடாரங்கொண்டானுக்கு எழுந்தருளி அங்கு யாகசாலைத் தரிசனஞ்செய்து தருமைக்கு எழுந்தருளினார்கள். திருவாரூர் நகரமக்களும், உயர்திரு. G, இராமானுஜ முதலியார் அவர்களும் உடன் வந்திருந்தார்கள்.

மறுநாள் 7—4—65 கும்பாபிஷேகத்தன்று. யாகசாலை பூஜை முறையாகத் தொடங்கப்பெற்றது. குறித்த காலத்தில் பூரணாகுதி செய்து கடம் எழுந்தருளியாயிற்று. மங்கள இன்னிசைகள் முழங்க கடங்கள் வலமாகக் கொணரப்பெற்று உரிய இடத்தை அடைந்தன. குறித்த காலத்தில் மகாகும்பாபிஷேகம் நிறைவுற்றது. உயர்திரு. இராமானுஜ முதலியாரும், திருவாரூர் நகர மக்களும், கடாரங்கொண்டானுக்கு அண்மையிலுள்ள மக்களும் திரள் திரளாக வந்து மகாகும்பாபிஷேக தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள்.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும், விஜயபுரம் வியாபாரிகள் சங்கத் தலைவர் திரு. துரைசாமிச் செட்டியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வாழ்த்துரை ஒன்று வாசித்துக் கொடுத்தார். திருவாரூர் இராஜாங்கக்கட்டளை, கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தக்க முறையில் அவர்கட்கு நன்றியுரைகூறி மரியாதை செய்தார்கள். அன்று இரவு மகாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெற்றது. அன்பர்கள் பலர் கண்டு மகிழ்ந்தனர்.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டு விழா

நிலைய மன்றத்தின் ஜனவரிமாத வழிபாடும், சமயப் பிரசாரமும் பழைய மாம்பலம் ஈஸ்வரன்கோயில் தெருவில்உள்ள ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்தில் 31—1—65 ஞாயிறு மாலை 5-30 மணிக்குச் சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை நிகழ்த்தப்பெற்று முறையாக வழிபாடுகள் செய்யப்பெற்றன. பிறகு ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகள் அர்த்தோதய, மகோதய புண்ணியகாலச் சிறப்புப்பற்றியும், அக்காலங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடவேண்டிய முறைபற்றியும் விளக்கினார்கள். திரு. என். தண்டபாணி பிள்ளை, திரு. ஆங்கிரச, வேங்கடேச சர்மா, திரு. இரா. சுப்பிரமணிய சர்மா, திரு. கே. கமலக்கண்ணன் எம். எல். சி., திரு. அம்பை. சங்கரனார், ஆகியோர் வழிபாடுபற்றியும், சாத்திர தோத்திரங்கள் பற்றியும் விளக்கிப் பேசினார்கள். தேவார இசைமணி, திரு. இலக்குமணன் திருமுறைகளை இசையுடன் ஓதி மகிழ்வித்தார்.

## பிப்ரவரி மாத வழிபாடு

பிப்ரவரி மாத மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 28—2—65 ஞாயிறு மாலை 5 மணிக்கு மயிலாப்பூர் தெற்கு மாட வீதியில் உள்ள ஸ்ரீ வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை நிகழ்த்தப்பெற்றது. குழுவினர் திரு. அங்கமாலைத் திருப்பதிகம் ஓதியபடியே திருக்கோயில் வலம்வந்து முறையாக வழிபாடியற்றினர். பிறகு ஆஸ்தான மண்டபத்தில் சமயப்பிரசாரம் நடைபெற்றது. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையுரை நிகழ்த்துகையில் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை பி. ஏ., ஐ. ஏ. எஸ். அவர்கள் எழுதிய "சிவராத்திரி வரலாறு" என்ற புத்தகத்தை அறிமுகம் செய்துவைத்து வெளியிட்டதோடு, சுக்கிரன் • வெள்ளி வழிபட்டுக் கண் பெற்றதால் இக்கோயில் வெள்ளீசர்கோயில் எனப் பெயர்பெற்றது என்றும் குறிப்பிட்டார்கள். திரு. ச. சிவகுமாரன், திரு. என். ஆர். முருகவேள், திரு. கோ. மு. முத்துசாமிப் பிள்ளை, திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர், மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்வேண்டி மகாவிஷ்ணு குறுவடிவம் பெற்று வேண்டியதையும், தானம்கொடுக்க நீர் வார்க்கும் கெண்டியில் சுக்கிரன் வண்டுருபம் எடுத்து அடைத்ததையும், கெண்டித் துவாரத்தில் குச்சியால் குத்தும்போது சுக்கிரன் கண்கெட்டதையும், அப்படிக் கெட்ட கண் இங்குள்ள இறைவனை வழிபட்டதால் நற்கண்ணுயிற்று என்பதையும் விளக்கினர். சந்நிதிதோறும் திரு. பி. சுவாமிநாதன் தேவாரம் ஓதி மகிழ்வித்தார். அறங்காவலர்களும் அர்ச்சகரும் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் நன்கு நடத்திக் கொடுத்தனர்.

## வேளூர்க்கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா

9—3—65 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் ஸ்ரீதையல்நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும் நிகழ்த்தப்பெற்ற அபிஷேக சகஸ்ரநாமார்ச்சனைப் பிரசாதங்கள் 10—3—65 மாலை 7 மணிக்கு நிலையத்தில் "ஜோதிஷமணி" ஆசிரியர் திரு. வி, கே. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தலைமையில் வேளூர் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் பாராயணம்செய்து அன்பர்கட்கு வழங்கப்பெற்றன. வித்துவான், திரு. ந. இராமலிங்கம் பிரார்த்தனை நிகழ்த்தினர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றூர்கள்.

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

ஸ்ரீமத் ஸமஸ்த கல்யாண குண பாஜனமான ஸ்ரீ விசுவாவசு வருஷம் சித்திரை மாதம் முதல் தேதி மங்களவாரம் பூர நக்ஷத்திரம் 18-43 க்குமேல் உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பகல் 19 நாழிகை 41 விஞடிக்கு கடல லக்னத்தில் மீன நவாம்சையில் ஸ்ரீ சூரியபகவான் மேஷ இராசியில் பிரவேசம் ஆகி சகல லோகங்களுக்கும் சமஸ்தமான மகாஜனங்களுக்கும் நித்திய மங்களத்தையும், ஆரோக்கியத்தையும், தனதான்ய விருத்தினையையும், ஸ்ரதோஷத்தையும் கொடுத்து அருள் புரிவாராக. ( லோகாஸ்மஸ்தாஸ்ஸுகிநோபவந்து )

( விசுவாவசுஞு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய )

(13—4—65 முதல் 13—5—65 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களைத் தரும். தனதான்ய விருத்தியும், ஜீவன லாபமும் ஏற்படும். விவாகாதி சுபகாரியங்களும், வம்ச விருத்தியும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் இடம் மாறுதலோடு உத்தியோக விருத்தியும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேருதலும், பரோபகார சிந்தனையும், உலகப் பிரசித்தியும் ஏற்படச் செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் இல்லற சுகபோகங்களைத் தரும். பந்துமித்திர கல்யாண வைபவங்களையும், நஷ்டதனபிராப்தியையும் தரும். வித்தியாவிருத்தியாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் கிரயவிக்ரயங்களில் லாபத்தைத் தந்து அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாக்கும். குடும்பம் ஓங்கும். சகல துக்கங்களும் நிவர்த்தியாகி நினைத்ததெல்லாம் சுலபமாய் நடக்கும்படிச் செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் ஆரோக்கியத்தைத்தரும். உத்தி யோகத்தில் மேல் பதவிகளை உண்டுபண்ணும். விவாகாதி சுப சந்தோஷங்களும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச் செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்வ சக்தியோடு பிரகாசிக் கச் செய்யும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். நஷ்டமான பொருள்கள் தானாக வந்து சேரும். குடும்ப சுகம் ஓங்கும். பிரதிஷ்டா பலன்களும், மகா யாகாதி புண்ணிய பலன்களும் விசேஷமாய் விருத்தியடையும். வெள்ளி, சனி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும் விசேஷமான ஜீவன லாபத்தோடு எங்கும் பிரசித்தியையும் தந்து பூர்ணமான தெய்வசக்தியோடு பிரகாசிக்கச் செய்யும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமா கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். தனதான்யங்கள் விருத்தியடையும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசியில் விசாகம் 4 ஆம்பாதம் தவிர மற்ற 8 பாதங் களும் விசேஷ சௌக்கியத்தையும், சுகபோகங்களையும் உண்டு பண்ணும். குடும்பம் ஓங்கும், சதா சஞ்சார பலனைக் கொடுத்து லாபத்தையும் தரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் ஜெயத்தை உண்டுபண்ணும் சத்துருக்கள் ஓடிவிடுவார்கள். நூதனமாக கிரக சுகபோகங்கள்

விருத்தியாகும். விவாகாதி சுபங்களும், உத்தியோகத்தில் மேல் பதவியையும் ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் வித்தியாவிருத்தியாகும். பரிசுகள் கிடைக்கச்செய்யும். கடன் நிவர்த்தியாகி, தனதான்ய விருத்தியைத் தரும். குடும்பம் ஓங்கும். இராஜாங்கத்தாலும் மேலோராலும் மதிப்பு ஏற்படச்செய்யும். எங்கும் பிரசித்தியும், கீர்த்தியும் உண்டாகும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சஞ்சார பலனைத் தந்து, விசேஷ நன்மைகளையும் உண்டுபண்ணும். தெய்வ சக்தி ஓங்கும். வம்சம் விருத்தியாகும். வித்தியாவிருத்தியும், உத்தியோக லாபமும் உண்டாகும். ஆரோக்கியம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் ஜீவன லாபத்தைத் தரும். கிரய விக்கிரயங்களாலும், கைத்தொழில் மூலமாகவும் விசேஷ லாபத்தை உண்டுபண்ணும். இராஜாங்கத்தாலும், மேலோர் பெரியோர்களாலும் நன்மதிப்பு ஏற்படச் செய்யும். விவாகாதி சுபங்களும், ஸ்திர சுகவாச ஜீவனமும் தரும். செவ்வாய், வியாழன் சுபமாகும்.

குறிப்பு:— இவ்வருஷாரம்பம் முதல் கிரககதிகளும் ஷட்கிரக கூடாதிகளும் அடுத்த மாதத்திலும் சேர்ந்து வக்கிர அஸ்தமன ஸ்தம்பாதி யோகங்களுடன் கிரக சஞ்சாரங்கள் ஏற்படுவதாலும், மேஷ சங்கிரமணம் பகல் வேளையில் நக்ஷத்திர ஸரதியிலும், லக்கின ஸரதியிலும் ஏற்படுகிறபடியால் மகாஜனங்களின் தபோ பலத்தாலும், சத்தியம், தர்மம், சௌசம், ஆசாரம், பிராசீன தர்மரக்ஷணம், மகாயக்ஞ யாகங்கள் இவைகளுடைய பலன்களாலும்தான் உலகத்தை எதிர் நோக்கி நிற்கும் சகல துக்கங்களும் நீங்கி, சமஸ்த தேசங்களுக்கும் தெய்வ சக்தியோடு முன்னின்று உலகத்தை ரக்ஷிக்கச் செய்யும், சுபமுண்டாகும்.

குருபாதம்

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

18—4—65 விறன்மிண்டர்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீகாசி கதிர்காம வேலவர் திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

25—4—65 திருநாவுக்கரசர்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீசிதம்பரநடேசர் திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

2—5—65 மங்கையர்க்கரசி

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீஅசபாநடனப்பதிகம்

— திரு. ம. சிவசம்பு

9—5—65 இசைஞானியார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி திருவருட்பா

— திரு. ம. சிவசம்பு

நெல்லை அருணகிரி இசைக் கழகம், } இராம. கனகசபாபதி, அமைச்சர்.

---


## விசுவாவசு வருஷ

## அசல் மருத்துவக்குடி வாக்கியப் பஞ்சாங்கம்

கஞ்சனூர் அப்பனையங்கார் குமாரர் அண்ணாவையங்கார் அவர்கள் சிஷ்ய பரம்பரையில் மருத்துவக்குடி சுவாமிநாத சோதிடர் குமாரரும், குருமூர்த்திஐயர் சகோதரருமான திரு. G. S. வெங்கட்ராமஐயரால் கணிதஞ்செய்தது. 48 பக்கங்கள். விலை 50 பைசா. பஞ்சாங்களுள் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது. பன்னெடுங்காலமாக நின்று நிலவி வருவது.

# திருவாமூரில் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

சைவசமயாசாரியர் நால்வருள் இரண்டாவது ஆசாரியராகிய திருநாவுக்கரசு நாயனர் (அப்பர் சுவாமிகள்) அவதாரத் தலம் திருவாமூர். இத்தலம் கடலூர் - திருக்கோவிலூர் பெருவழிச் சாலையில் பண்ணுருட்டிக்கு மேற்கே ஐந்துகல் தொலைவிலும், மடப்பட்டிக்குக் கிழக்கே ஐந்து கல் தொலைவிலும் உள்ளது. பஸ், இரயில் வசதியுண்டு. அப்பர்சுவாமிகள் முத்தி அடைந்தது சித்திரைமாதச் சதயத்தில், அச்சதய நட்சத்திரம் 26—4—65 திங்கட்கிழமை விசுவாவசு வருஷம் சித்திரை மாதம் 14-ம் நாள் வருகிறது.

அக்குருபூசை விழாவை முன்னிட்டு 24, 25, 26—4—65 சித்திரை மாதம் 12, 13, 14 சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் "அப்பர்தேவார அருந் தமிழ் மகாநாடு" அப்பர் பெருமான் அவதாரத்தலமாகிய திருவாமூர் அப்பர் சுவாமிகள் ஆலயத்தில் அப்பர் அருட்டுணையாலும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளாசியாலும், அறநிலைய இலாக்காவின் ஆதரவாலும், பொது மக்கள் உதவியாலும் சிறப்பாக நடைபெற உள்ளது.

புதுவைராஜ்ய முதல் அமைச்சர், திரு. வேங்கடசுப்பா ரெட்டியார், புதுவை ராஜ்ய உயர்நீதிபதி, திரு S. மகராஜன், திருமுருக, கிருபானந்தவாரியார், சென்னை, மாநில, அறநிலைய ஆணையர், திரு. M. S. சாரங்கபாணி முதலியார், ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. L. C. இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் பித்துக்கொளி முருகதாஸ், ஆகியோரும் மற்றும் பலரும் பங்கு கொள்கின்றனர். மிகச் சிறந்த ஓதுவாமூர்த்திகள் பலரும், சிவபூசகர்களும், கலந்து கொள்கின்றனர், அன்பர்கள் தங்களாலியன்றபொருளுதவி புரிந்து அப்பர் பெருமான் அருளைப் பெறுவார்களாக.

இங்ஙனம்,

எம். எம். தண்டபாணி தேசிகர்,

தலைவர்.

திருவாமூர் அப்பர்சுவாமிகள் குருபூசைவிழாக்கழகம்,

14, உஸ்மான்சாலை, தியாகராயநகர் சென்னை, 17.

---

குறிப்பு:- பொருளுதவிபுரிவோர், பொருளாளர், திருவாமூர் அப்பர் சுவாமிகள் குருபூசைவிழாக்கழகம், 41 - உஸ்மான் சாலை, சென்னை 17 என்ற முகவரிக்கு அனுப்பி இரசீது பெற்றுக்கொள்ளவும்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10 4 65